திராவிடநாடு

22—3—59 | வார வெளியீடு | விலை 16 காசு

திருப்பு நெஞ்சை!

(எம். கே. சீனிவாசன்)

****

மல்லிகையின் பூச்சரத்தில் மணமிருக்கும்;
மாந்தமிழில் அந்தமணம் கொலுவிருக்கும்!
சொல்லுதமிழ்ச் சுவடியிலே தேனிருக்கும்;
சொல்லரிய தமிழ்க்கடலில் முத்திருக்கும்!
'சில்'லென்ற தென்றலிலே குளிரிருக்கும்;
செந்தமிழில் அதன்குளுமை குடியிருக்கும்!
எல்லையிலா வான்,எங்கும் விரிந்திருக்கும்;
எங்கள்தமிழ் அங்கெல்லாம் சிறகடிக்கும்!!

தென்பாண்டிக் கடல்முத்தின்சிரிப்பில், இன்பச்
செந்தமிழாம் தேயாத நிலவைக்கண்டேன்!
அன்போடு காதலர்கள் தரும்முத்தத்தில்,
அணைகின்ற நெஞ்சத்தில் தமிழைக்கண்டேன்!
துன்பத்தின் நிழலோட்டும் சோதிமின்னல்,
தூயதமிழ் எம்வாழ்வின் ஒளிவிளக்கு!
முன்பெங்கள் இனம்வளர்த்த கலையின்கூட்டம்;
மூதாதைக் குலம்காத்த செல்வப்பேழை!!

கயல்விழியைக் குருடென்று தள்ளிவிட்டுக்
கபோதியினை மணம்புரியும் மடமைபோல
அயல்மொழியை நடமாட விட்டுவிட்டாய்;
அப்பாவித் தமிழ்மகனே திருப்புநெஞ்சை!
இயலிசையும்நாடகமும் இணைந்த சொத்தாம்;
இனியதமிழ், கருத்தென்ற பயிரின்வித்தாம்!
செயலெல்லாம் தமிழ்வாழப்புரிவாய், உன்றன்
சிந்தையெலாம் தமிழ்ச்சோலை மலரச்செய்வாய்!!



உற்பத்தி நாளுக்கு நாள், ஓரிரு துறையிலே மட்டுமல்ல, ஒவ்வொரு துறையிலும் பெருகிய வண்ணமிருக்கிறது — ஆனாலும் — விலைவாசிகள் குறைந்தபாடில்லை, மாருக விஷம்போல் ஏறுகின்றன!

கோடிக்கணக்கிலே பணத்தைக் கொட்டி அணைக்கட்டுகளைக் கட்டியிருக்கிறோம்; ஆலை பலவற்றைத் துவங்கியிருக்கிறோம், அனுதினமும் புதிய புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவண்ணமிருக்கின்றன — ஆனாலும் — வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்துவிடவில்லை, நிலைமை சீர்திருந்தவில்லை!

மக்களின் வாழ்க்கைத் தரமென்ன? அவர்களிடம் எந்த அளவு வரி வசூலிக்கலாம், எந்த அளவு அவர்களாலே தாங்க இயலும், என்பதையெல்லாம் கூடச்சிந்தித்திடாமல்; புதியபுதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன- ஆனாலும் — பணம் போதவில்லை என்று, புதிய புதிய முறைகளைக் கையாண்டு நிலைமையைச் சமாளித்திட எத்தனிக்கும் இக்கட்டான நிலை இருக்கிறது!

வாணிபத்தைப் பெருக்க, ஏற்றுமதியை அதிகப்படுத்த, எண்ணிறந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன— ஆனாலும்— ஏற்றுமதி பெருகவில்லை!

நாமெல்லாம் இந்நாட்டுச் சோதரர், நமக்குள்ளே பேதமா, பிளவா, பூசலா, போராட்டமா, இது ஆகுமா, அடுக்குமா என்று நாள்தோறும் முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன — ஆனாலும் ஒற்றுமை எண்ணம் வளர்ந்திடவில்லை, வளர்வதற்கான அறிகுறியும் தென்படவில்லை!

சமதர்ம கீதம் எங்கெங்கும் எழுப்பப்படுகிறது, ஆட்சியாளர்களால். அதுவும் அழுத்தந்திருத்தமாக—ஆனாலும்—பணத் திமிங்கிலங்களின் பலம் குறைந்தபாடில்லை, அவர்தம் செல்வாக்கு மங்கவில்லை!

எச்சரிக்கையான நடவடிக்கை பலவும் எடுக்கப்பட்டிருக்கின்றன, ஆட்சியிலே அலங்கோலமேதும் இல்லாமலிருக்க — ஆனாலும் — இலஞ்சமும் இன்னபிற இழிநிலைகளும் களையப்படவில்லை!

அமைதி, அமைதி என்று அகில உலகினுக்கும் போதனை

சி. என். ஏ.

புரிந்தவண்ணமிருக்கிறோம் —ஆனாலும்-இராணுவத்திற்காகச் செய்யப்படுகிற செலவைக் குறைக்கத் தயங்குகிறோம்!

பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன, நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதனைப் பார்க்கிறோம் — ஆனாலும்-உணவுப்பொருள் நிலைமை மகிழ்ச்சி தருவதாக இல்லை, மருட்சி தரும்வகையிலே அமைந்துவிட்டிருக்கிறது!

* * *

இத்தகைய அரசியல் — 'ஆனாலும்' என்ற தொடரோடு கூடிய வாதங்கள் — நமது ஆட்சியாளர்களாலே நாள்தோறும் பேசப்படுவது; கேலிக்குரியது மட்டுமல்ல, குழப்பம் தரவல்லது!

இன்ன இன்ன காரணத்தாலே இது இது நடைபெற்றது இந்த நடவடிக்கையின் பலனாக இது ஏற்பட்டது, இந்தத் திட்டத்தின் விளைவு இது, என்று காரண காரிய விளக்கங்கள் தரப்படுவது இயல்பு, எங்கும் நடைபெறுவது என்பது மட்டுமல்ல, வாதத்திற்கு உகந்ததும்கூட!

இன்றைய ஆட்சியாளர்கள் அந்த முறையிலே காரண காரிய விளக்கங்களைத் தந்திடுவரேல், அது எவருக்கும் புரியுமென்பது மட்டுமல்ல, நாட்டிலுள்ள பலராலே ஏற்றுக்கொள்ளப்படும், நியாயம்தான் என்று பாராட்டவும் பெறும்!

உற்பத்தி பெருகியது, ஆகையால் விலைவாசிகள் குறைந்துவிட்டன, என்று விளக்கம் தரப்படுமானாலும், அந்த விளக்கம் எவருக்கும் எளிதிலேபுரிந்துவிடும்! இந்த இந்தத் திட்டங்களை நிறைவேற்றினோம், இன்ன இன்ன அணைகளைக் கட்டினோம். எனவே நாடெங்கும் வளம் பெருகியிருக்கிறது, வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது, என்று கூறப்படுமானால், அந்தக் கூற்று அனைவருக்குமே புரியும்— எவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்!

ஆனால், இன்றைய அரசியலில், ஆட்சியாளர்தம் வாக்குகளில் ஆகையால் என்பதைவிட ஆனாலும் என்பதே அடிக்கடி அடிபடுவதைப் பார்க்கிறோம்!

இன்றைய அரசியலிலேயுள்ள விநோதமான காட்சி இது!

(4-ம் பக்கம் பார்க்க)

எது ஜனநாயகம்?

மலர் 17 | ஆண்டு சந்தா ரூ. 8 | (22-3-59) | தனிப் பிரதி 16-காசு | இதழ் 36

உண்மையான ஜனநாயகம் நாட்டில் மலர வேண்டுமானால், சர்க்கார் செய்யும் தவறுகளை அவ்வப்போது கண்டித்துத் திருத்த முயலவேண்டுமென்பதை நாம் மட்டுமல்ல, நாட்டு நலனில் அக்கறைகொண்ட நல்லவர்கள் — நடுநிலையாளர்கள் அனைவருமே கூறிவருகிறார்கள்.

இந்திய உபகண்டம் விடுதலை பெற்றுப் பதினொரு ஆண்டுகளாகின்றன. ஆளும் திறமைக் குறைவோ அல்லது நம்மைவிட ஆளும் திறமை பெற்றவர்கள் யாரும் இல்லை என்கிற கனத்த போக்கோ நாமறியோம்—சர்க்கார் மேற்கொள்ளும் எந்தத் திட்டமும் இதுவரை அதன் முழு உருவை—வெற்றியை அடைய முடியவில்லை. இதற்குக் காரணம், நாம் மேலே குறிப்பிட்ட இரு காரணங்களில் எதை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளட்டும். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. திறமைக்குறைவோ என்னைவிட யாரால் முடியும் என்ற தலைக்கனமோ நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்ததுமல்ல—உதவக்கூடியதுமல்ல. இந்த உண்மையைச் சர்க்கார் உணரும்வரை — உணர்ந்து அதற்கேற்பக் காரியங்களை நடாத்திச் செல்லவேண்டுமென்ற நல்லெண்ணம் பிறக்கும்வரை, நாடு இந்தச் சர்க்காரிடமிருந்து எந்தவிதமான நன்மையையும் பெறமுடியாது.

வெறும் பானையைத் தனக்கு முன்னால்வைத்துவிட்டு, அகப்பையைக் கையில் ஏந்தியவண்ணம், ஒருவன், "எல்லோரும் இங்கே வாருங்கள், பசி தீர உணவு தருகிறேன்" என்று கூறுவது எவ்வளவு பொருத்தமற்ற செய்கையோ, அதுபோன்ற செய்கைதான் இன்றைய சர்க்கார் கடைப்பிடிக்கும் முறையும். இதில் சிறிதும் தவறில்லை.

கையிலோ பணம் இல்லை, நினைப்போ ஏழடுக்கு மாளிகை கட்டி அதில் எழிலாக வாழவேண்டுமென்பது. இது எப்படி முடியும்? பானையில் இருந்தால் தானே, அகப்பையில் வரும்!

இந்த உபகண்டத்தின் பொருளாதார நிலையோ மிகமிக மோசம்! எதற்கெடுத்தாலும் யாரிடமாவது கையேந்தி நின்று வாழவேண்டிய நிலை, எப்படியோ இந்த நாட்டுக்கு ஏற்பட்டுவிட்டது. உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் இதுவரை டில்லி சர்க்கார் பட்டிருக்கிற கடன், சுலபமாகத் திருப்பிக்கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையை இழக்கும்படி செய்திருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. சிறு சேமிப்பு நிதியிலிருந்து ஸ்டர்லிங் கடன் வரை சர்க்கார் வாங்கியுள்ள தொகை கொஞ்சமல்ல, இவ்வளவையும் எப்படித் திருப்பித் தரப்போகிறார்கள் என்பது உண்மையிலேயே புரியாத புதிராகவே இருக்கிறது.

இந்த உபகண்டத்தின் நல்வாழ்வில் பொறுப்பும் அக்கறையும் கொண்டவர்களில் ஒருவரான அன்பர் ஆச்சாரியார் தரும் சில உண்மைகளை ஊன்றிக் கவனிப்பவர்கள், டில்லி சர்க்கார்பற்றி நாம் கூறும் குற்றச்சாட்டுகளை ஒருபோதும் தவறென்று வாதாட முன்வரமாட்டார்கள்.

"நிதி விவகாரங்கள் சம்பந்தப்பட்டவரை திட்டமிடுதல் துணிச்சலான காரியமாகவே துவங்கப்பட்டது.

இதனால், நாம் ஓட்டாண்டிகளாகிக்கிடக்கிறோமென்பதை யாவருமே அறிவார்கள்.

நமது கடன் பொறுப்புகளை எப்படிப் பைசல் செய்யப்போகிறோம் என்பது எனக்கே புரியவில்லை.

மக்கள் எதிர்த்தாலொழியச் சர்க்கார் தமது தவறைத் திருத்திக்கொள்ளமாட்டார்கள்.

ஏராளமாகக் கூச்சல் போட்டால் செவியில் விழும்படி செய்யலாம்.

பிரதம மந்திரிதான், ஏதோ பேசுகிறார் என்று பார்த்தால், இப்போது மாநில மந்திரிகளும் பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

இது ஜனநாயகத்தின் மந்திரிகள் பேசும் பாஷையல்ல.

ஐந்தாண்டுத் திட்டங்களின் சில அம்சங்களை நிறுத்தி வைத்தாலொழிய, திட்டத்தை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கைக்கே இடமில்லாமல் போய்விடும்.

திட்டம் என்ன, கடவுளா? மாற்ற முடியாதா?

நாசிக் அச்சகத்திலிருந்து கரன்சி நோட்டுகளை அச்சடித்துத் தள்ளிக்கொண்டே இருந்தால் போதுமா?

இதைப்பற்றியெல்லாம் மக்கள் விரைவில் சிந்திக்க ஆரம்பிக்கவேண்டும்.

முதலில் தேசத்தைச் சீர்படுத்திப் போதிய செல்வத்தைச் சேகரித்த பின்னர், வேண்டுமா

னால் எல்லோரையும் சமமாகக் கருதுவதுபற்றி யோசிக்கலாம்."

இந்தக் கருத்துக்கள் யாவும், "இந்தியாவின் பொருளாதாரம்" என்ற தலைப்பில் 18—3—59ல் அன்பர் ஆச்சாரியாரால் தரப்பட்டவையாகும்.

தி. மு. க. வினரோ அல்லது வேறு எதிர்க்கட்சியினரோ இவ்விதம் பேசுவதைக் கேட்டால்—அறிந்தால் ஆத்திரத்தின் முழு வடிவத்தையும் பெறும் நமது அமைச்சர் குழாம், இப்போதாவது உண்மையை உணரவும் — உணர்ந்து சிறிதளவாவது ஜனநாயகத்தை மதித்து நடக்கவும் முன்வரமாட்டார்களா என்ற நம்பிக்கை நமக்கு இன்னும் இருப்பதாலேயே இதனை எழுதுகிறோம்.

மத்திய சர்க்காரும் மாநில சர்க்கார்களும் இதே போக்கிலேயே நடந்து செல்வார்களானால், அன்பர் ஆச்சாரியார் கூறுவதுபோல், மக்களின் குரல் எழும்—வலுக்கும்—மேலோங்கும்—அப்போது சர்க்கார் பணியும் நிலை உண்டாகும்—அதேபோது இந்த நாடும் மற்ற ஜனநாயக நாடுகள் போல், தன்னை ஆக்கிக்கொள்ளும் நிலை ஏற்பட்டே தீரும் என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகிறோம். மக்களின் குரலுக்கு மதிப்புத் தருவதுதான் உண்மையான ஜனநாயகமாகுமே யொழிய, தனியொருவனின் குரல் எந்தக் காலத்திலும்—எந்த நாட்டிலும் உண்மையான ஜனநாயகத்தை உருவாக்கியதில்லை—உருவாக்க முடியாது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த வேடிக்கையான காட்சி எதனாலே ஏற்பட்டது? ஆனாலும் என்ற பாணியில் ஆட்சியாளர்கள் பேசக் காரணமென்ன என்பதை நாம் நிச்சயம் உணர்ந்தாக வேண்டும். அங்ஙனம் உணர்ந்தால்தான், நமக்கு ஏற்படுகின்ற குழப்பங்கள் நீங்கும், தெளிவு பிறக்கும், நாட்டின் உண்மைநிலை தெற்றென விளங்கும்!

இத்தகைய வேடிக்கையான வாதங்கள், விநோதமான விளக்கங்கள், எந்தெந்தச் சமயங்களிலே தரப்படுகின்றன? எந்தெந்தச் சூழ்நிலைகளிலே பயன்படுத்தப்படுகின்றன?

மக்களிடத்திலே எதிர்காலத்தைப் பற்றிய மருட்சியும், மனக்குழப்பமும் ஏற்படும்போதெல்லாம் இந்த 'ஆயுதம்' பிரயோகிக்கப்படுகிறது, நமது ஆட்சியாளர்களால்!

ஆட்சியாளரின் இந்தப்போக்கு மக்கள் தம் உள்ளத்தில் மனக்கலக்கம் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும் என்று அவர்கள் கொண்டிருக்கிற ஆசையினைக் காட்டுகிறதே தவிர, வேறல்ல.

ஆனால், ஆட்சியாளரின் வாதங்களையும் விளக்கங்களையும் மக்கள் ஏற்றுக்கொண்டால்தானே, மனக்கலக்கம் போகும், நம்பிக்கை ஏற்படும்! மக்கள் எங்கே ஏற்றுக்கொண்டார்கள்? என்ன ஆதாரம் ஏற்றுக்கொண்டதற்கு?

தங்களது வாதங்களையும் விளக்கங்களையும் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள், திருப்தியடைந்துவிட்டனர், என்று ஆட்சியாளர் 'தப்புக்கணக்கு' போடுகின்றனர், திரும்பத் திரும்ப!

இந்தத் தப்புக்கணக்குப் போடும் விநோதமான நிலைமை மாறுகின்ற வரை, நாட்டிலேயிருக்கின்ற எந்தப் பிரச்சினையிலும், நிரந்தரமான நல்லதோர் தீர்வு காண முடியாது!

பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும், அதுவும் நல்லமுறையில், என்று ஆட்சியாளர்கள் மனதார நம்புவார்களானால், எதையும் மூடிமறைத்திடுவதிலே-தங்களுக்கு இருக்கின்ற திறனை நம்புவதிலே அர்த்தமில்லை. எதிர்ப்போர் எவராயினும், இதோ விட்டேன் பார், என்று அவர் தம்மைத் தாக்கிப் பேசுவதாலும், ஒரு சிலரை எப்படியோ தம்பால் ஈர்த்துக்கொள்வதாலும், தட்டிக்கொடுப்பதாலும், பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை!

ஆனால் நமது அமைச்சர்கள் செய்வதென்ன? பிரச்சினைகளை மூடி மறைப்பதிலும், பொதுமக்கள் தம் கண்களிலே மண்ணைத் தூவுவதிலும், குற்றம் குறைகளைக் காட்டிக் கண்டிப்போரை ஏசிப் பேசுவதிலும், ஏளனம் செய்வதிலுமே, கவனத்தைச் செலுத்துகின்றனர்!

அங்ஙனம் செய்வதன்மூலம், எதிர்ப்புகள் அழிந்துபடுகின்றன என்று அவர்கள் எண்ணிக்கொள்ளுகின்றனர். மனத்திருப்தியும் எய்துகின்றனர்! — ஆனால், பிரச்சினைகளைத் தீர்க்க ஆட்சியாளர் கையாள வேண்டிய வழிகள் அவையல்ல என்பதையும், அவற்றின் மூலம் பிரச்சினைகள் வேண்டுமானால் ஒத்திப்போடப்படக்கூடுமே தவிர, நிரந்தரமான தீர்வு கிடைப்பதில்லை என்பதனையும், என்ன காரணத்தாலோ மறந்துவிடுகின்றனர்.

சட்டமன்றங்களிலேயும், பாராளுமன்றத்திலும், ஆட்சியாளர் பெற்றிருக்கிற அளவுக்கு மீறிய எண்ணிக்கை பலமும், அவர்தம் தவறு எதுவாயினும் மூடி மறைக்க முயலுகின்ற பத்திரிகைகளின் துணையையும் பெற்றிருப்பதாலே, எதிர்ப்பு எதனையும் எளிதிலே சமாளித்து விட முடிகிறது அவர்களால்!

இப்படி மூடிமறைப்பதால் என்ன நன்மை? நாட்டுக்கு நன்மை? இது அறிவுடைமையாகாது என்பது மட்டுமல்ல, ஆபத்தானதும் கூட.

ஆட்சியாளர், தங்களின் வீரத்தை எந்த வகையிலே வேண்டுமானாலும் காட்டிக்கொள்ளட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை நாம்!

ஆனால் அவர்தம் விளக்கங்களையும் வாதங்களையும் மக்கள் நம்புகின்றனர் என்ற தப்புக்கணக்கு மட்டும் போடவேண்டாம்.

மாற்றுக் கட்சியிலேயுள்ளவர்கள் சுட்டிக் காட்டுகின்ற குற்றங்களுக்குப் பதில் தரட்டும்—அவர்தம் வாதங்கள் இன்னின்ன இடங்களிலே சொத்தை, இன்னின்ன இடங்களிலே தவறு, என்று சுட்டிக்காட்டட்டும் —வரவேற்கிறோம், அதுதான் தேவை என்பதனையும் கூறிக்கொள்கிறோம்.

ஆனால், மாற்றாரின் கருத்துக்களை ஒதுக்கித் தள்ளுவதிலும், தாக்கிப் பேசுவதிலும், காலத்தையும் கவனத்தையும் செலவிடுகின்றனர்!

நமது மாநிலத்திலேயுள்ள அமைச்சர்கள், 'எதிர்க்கட்சி தேவை' என்று சொல்லுவதிலேயே ஒரு மகிழ்ச்சியைப் பெறுகின்றனர் — அப்படியொரு

(13-ம் பக்கம் பார்க்க)

இவர்கள் பேசினால்....!

செய்தி

மத்திய ஆப்பிரிக்கக் கூட்டாட்சியிலுள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றான நியாசாலாந்தில் வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து நீக்ரோவர் போராடுவதன் பலனாக, பலர் நாடு கடத்தப்பட்டனர்—சிலர் இறந்தனர்! நாடு கடத்தப்பட்டோரில் நீக்ரோவர் தலைவராம் டாக்டர் ஹேஸ்டிங் பண்டா என்பவரும் ஒருவர்.

டாக்டர் பண்டா

நாடு கடத்தப்பட்டிருக்கிற நான் — சட்டவிரோதமாக்கப்பட்டிருக்கிற என் கட்சி—சிறைக்கோட்டத்தில் நலிகின்ற நூற்றுக் கணக்கான என் நண்பர்கள்—துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி உயிர் நீத்த பலர் — இறப்புக்கும் இவ்வுலக வாழ்விற்குமிடையே போராடிய வண்ணமிருப்போர் — எல்லோரும் செய்திருக்கின்ற குற்றமென்ன? இழைத்த கொடுமை என்ன?

நலிகின்ற என் தாயகத்தை—நியாசாலாந்தை— வெள்ளையர் தம் கோரப் பிடியிலிருந்து வெறியாட்டத்திலிருந்து, விடுவித்திட முயன்றேனே, இது குற்றமா?

எங்கள் இனத்தவர்—நீக்ரோக்கள்—ஏறக்குறைய மூன்று இலட்சம் பேர் இருக்கின்றோம் நியாசாலந்தில்! வெள்ளையர் தொகையோ ஏறக்குறைய 8,000' இவர்கள் எங்களை அடக்கியாள்வது, அதை நாங்கள் சகித்துக்கொள்வதா என்று தட்டிக் கேட்டேன், குற்றமா?

பாராளுமன்றத்தில் எங்கள் இனத்தவருக்கு இடமில்லை--ஓட்டலில் வெள்ளையரோடு சரிசமமாக அமர்ந்து சாப்பிட அனுமதி இல்லை—தபாலாபீஸ், பாங்குகள், இங்கெல்லாம் எங்களுக்கென்று தனி வழிகள்—இந்த முறை ஏன், இது அடுக்குமா, நியாயந்தானா, என்று கேள்விகளை விடுத்தேனே, குற்றமா?

எங்கள் நாட்டில், வந்தவர் வாழ்ந்திட, சொந்த நாட்டவர் நலிவதா—எனவே, தாயகத்தோரே! தயங்காதீர் உரிமை பெற, உரிமையினும் மேலானதொன்றுமில்லை, மானமிழந்து வாழ்ந்திடவோ— என்று உரிமைக்குரலெழுப்பினேன், கூடாதா?

நம்நாடு—நியாசாலாந்து--தென் ரொடீஷியாவோடும், வட ரொடீஷியாவோடும் பிணைக்கப்பட்டதே ஆங்கிலேயரால், ஆறு ஆண்டுகட்குமுன் யாரைக் கேட்டுச் செய்தார்கள்—எப்படி நாமிந்த ஏற்பாட்டைஏற்றுக்கொள்வது என்று வினாக்கள் பலவற்றை எழுப்பினேன் மக்கள் மன்றத்தில்! அடுக்காதா இது?

தென் ரொடீஷியாவில் வெள்ளையர் தொகை அதிகம் — ஆட்சிப் பொறுப்பு மட்டுமல்ல; பொருளாதாரப் பிடியே அவர்களிடம் அகப்பட்டுவிட்டது — அங்கிருக்கின்ற

M. S. வெங்கடாசலம், M. A.,

நீக்ரோவர் வெள்ளையரை எதிர்த்துப் போராடுவதென்பது அவ்வளவு எளிதல்ல! வடரொடீஷியாவிலும் அதே நிலை! எனவே நாம் —நியாசாலாந்தைச் சேர்ந்தோர்— நல்வாழ்வு வாழ வேண்டுமெனில், நமது உரிமைகள் நிலைத்திட வேண்டுமெனில், மானம் காப்பாற்றப்பட வேண்டுமென்று நாம் மனதார நம்பினால், உடனடியாகக் கூட்டாட்சியிலிருந்து விடுபட வேண்டும்--நமது கரங்களிலே பூட்டப்பட்டிருக்கிற கூட்டாட்சியெனும் விலங்கு ஒடிக்கப்பட வேண்டும்—என்றெல்லாம்காரண காரிய விளக்கங்களை, என் தோழர்கள்பால் செப்பினேன்! குற்றென்ன செய்தேன்?

கூட்டாட்சியிலிருந்து நாடு விடுபட வேண்டும் என்று மட்டுமே சொன்னேன் — ஆங்கிலேயரது ஆளுகையிலிருந்தும் நாடு விடுபட வேண்டுமென்று நான் வெளிப்படையாகச் சொல்லவில்லை, அந்தப் பிரச்சினையையும் இப்போது ஏன் போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டுமென்பதால்!

தாயகத்து மக்களுக்கு உரிமைகள் வேண்டுமென்று நான் நடத்துகிற போராட்டம், தாயகத்து விடுதலைக்காகப், பிறகு மிக விரைவில், நடத்தப்போகின்ற போராட்டத்தின் முதற்படி -- ஒத்திகை!

இந்த 'ஒத்திகை'யிலேயே நானும் என் கட்சியும், கட்சியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு பணியாற்றப் புகுந்திருக்கும் பல நூறு தோழர்களும் பட்டிருக்கின்ற துன்பங்கள் பலப்பல!

நானாவது நாடு கடத்தப்பட்டேனே — என்றாவது ஓர் நாள் பிறந்த மண்ணை மிதித்திட முடியும் என்ற நம்பிக்கை, அனைவருக்குமே இருக்கிறது!

ஆனால் இந்த உலகத்தை விட்டே அனுப்பப்பட்டவர்கள்...?

உரிமைகேட்பவர்களது உயிரே பறிக்கப்படுகிறது எந்த வகையிலே நியாயம்? நாட்டுப்பற்றுக் கொண்டோர் வாட்டி வதைக்கப்படுதல் எப்படி நீதியாகும்?

மனிதப் பண்பாட்டிற்குப் போராடுவோர், மாக்களினும் கீழாய் நடத்தப்படுதல், எப்படி நேர்மையாகும்?

இந்தக் கேள்விகட்கெல்லாம் நியாசாலாந்தைப் பிணைத்துக் கூட்டாட்சியென்னும் இரும்புப் பிடியிலே சிக்கவைத்துக் குரல்வளையை நெறித்துக்கொண்டிருக்கிற ஆங்கில ஏகாதிபத்தியம் பதில் சொல்லியே தீரவேண்டும்?

"கூட்டாட்சி ஒழிக" என்றேன், நாடு கடத்தினார்கள்! ஆனால் என்ன நடந்தது? நான் நடத்துகிற இயக்கத்தின் பணி தடைப்பட்டதா? இல்லையே!

நான் நாடு கடத்தப்பட்ட ஒரே வாரத்தில் ஒரு இளைஞன் — எங்கள் இனத்தவன் — நான் பேசிய அதே சாலிஸ்பரீ நகரில், அதே இடத்தில், ஒரு கூட்டம் கூட்டிப் பேசினானே, என்ன பொருள் அதற்கு?

நானாவது, கூட்டாச்சி ஒழிக, என்று சொன்னதோடு விட்டுவிட்டேன்! அவன் இளைஞனல்லவா! அடுத்த கட்டத்திற்கே சென்றான் — "வெள்ளையர்கள் இப்போதே எங்கள் நாட்டைவிட்டு வெளியேறியாகவேண்டும்" என்று திட்டவட்டமாகத் தாக்கீது பிறப்பித்தான்!

எத்தனை இடங்களிலே மூக்கு உடைபட்டாலும் 'ஏகாதிபத்தியங்கள் மட்டும், உண்மைகளை எளிதிலே உணர்ந்துகொள்வதில்லை! இல்லையென்றால், கானாவும் கினியாவும் இந்தியாவும் மலேயாவும்— பாகிஸ்தானும் பர்மாவும் — சைப்ரசும் சிலோனும் — உரிமைப் போரில்; முடிவில், வெற்றிகண்டிருக்கிற உண்மை, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு நல்லதோர் பாடத்தைப் புகட்டியிருக்க வேண்டும்! ஆனால், நியாசாலாந்தின் நிகழ்ச்சிகள் அத்தகைய பாடம் பெற்றதற்கான அத்தாட்சிகளைத் தரவில்லை என்பது மட்டுமல்ல, ஏகாதிபத்தியத் திமிர் இன்னமும் போகவில்லை என்பதையல்லவா காட்டுகிறது!

"ஏகாதிபத்தியம் வரலாற்றின் பழங்கதை" (Imperialisom is an episode in history) என்று இரஷ்யா போயிருந்தபோது, மிக கப்பீரத்தோடு முழங்கிய மாக்மில்லன்தான் பிரிட்டனின் ஆட்சிப்பீடத்திலே இருப்பது! ஆனாலும் பிடி தளரவில்லை — மூச்சுத் திணறுமளவுக்கு இறுக்குகிறது!

உம்! பார்ப்போம்! இன்னும் எவ்வளவு நாளைக்கு இதே நிலைமை இருக்குமென்று?

ராய் வேலன்ஸ்கி

என்ன தொல்லை இது! கூட்டாட்சியின் பிரதமராக நான் இருக்கும்போதுதானா இந்தத் தொல்லைகள் ஏற்படவேண்டும்? எந்தக் குழப்பமோ கொந்தளிப்போ நாட்டிலே கூடாது, என்று கருதுகின்ற மிதவாதி நான்! நான் ஆட்சிபீடத்தில் இருக்கும்போதுதானா இவ்வளவு குழப்பங்களும் நேரவேண்டும்?

உரலுக்கு ஒரு பக்கம் இடி' மத்தளத்துக்கு இரு பக்கம் இடி என்பார்கள்! எனக்கோ எல்லாப் பக்கங்களிலிருந்தும் இடி-அதுவும் தாங்கமுடியாத அளவுக்கு!

நீக்ரோ மக்களுக்கு உரிமை பெற்றுத் தருவதற்காக, தீவிரமான, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற பண்டாவும் அவர் கட்சியான ஆப்பிரிக்க தேசீய காங்கிரசு ஒருபுறம்--ஆம், ஆம்! நியாசாலாந்தைப் பிரித்துக் கொடுத்து விடுங்கள்! அப்போதுதான் தென் ரொடீஷியாவிலும், வட ரொடீஷியாவிலும், நமது ஆதிக்கத்தை நிலையானதாக்கிக்கொள்ள முடியும் என்று யோசனை கூறுகின்ற வெள்ளையர் ஒருபுறம் — இல்லையில்லை! நீக்ரோவர் எந்த உரிமையும் பெறத் தகுதியற்றவர் என்று வாதிடுகின்ற ஐரோப்பியர் தேசீய காங்கிரசு மற்றொரு புறம்—நியாசாலாந்து இப்போது நடத்துகிற போராட்டம், இதோடு நின்றுவிடுமா, அல்லது முழு உரிமை பெற்றாகவேண்டும் என்று போராடத் துவங்கிவிடுமா என்ற சந்தேகத்தில், தினமொரு கட்டளையாகப் பிறப்பித்தவண்ணமிருக்கிற பிரிட்டிஷ் அரசு வேறொரு புறம் — இவற்றிற்கிடையே நான் படும் பாடு! அப்பப்ப! யாரிடம் சொல்வேன்?

பண்டாவும் அவர் தம் கட்சியும் கேட்கின்ற உரிமைகள் நியாயமானவை என்று பலமுறை வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறேன் நான்!

எனக்கும் அந்தக் கட்சிக்குமிடையே இருக்கின்ற கருத்து வேறுபாடு, உரிமைகள் எவ்வளவு விரைவில் வழங்கப்படவேண்டும் என்ற காலவரையறைப் பிரச்சினையிலேதான்!

பிரச்சினை முக்கியமானதுதான் —ஏற்றுக்கொள்ளுகிறேன்! நான் சொல்லுகிற கால வரையறைகூட அவர்களாலே ஒப்புக்கொள்ள முடியாததாக இருக்கலாம்!

ஆனால், அதற்காக... அவர்கள் ... இப்படியா நடந்துகொள்வது?

அடர்ந்த காடு ஒன்றிலே கூடி' ஏதோ பேசினாராம் $1\frac{1}{2}$ மாதத்துக்கு முன்னால்!

ஆயுதந்தாங்கி, வெள்ளையரையும் மற்றவர்களையும் தாக்க முனைந்திருக்கின்றனர் இப்போது!

விமானக்கூடமே தவிடுபொடியாக்கப்பட்டிருக்கிறது, ஓரிடத்தில்!

அரசாங்க அலுவலகங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன, தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன, பற்பல இடங்களில்!

இவ்வளவு அக்கிரமங்களையும் உலகறியச் செய்துவிட்டேன்!

ஆனால்...! ஏன் இந்த அக்கிரமங்களைச் செய்தார்கள் என்பதற்கான விளக்கங்களை அவர்கள் தந்திருக்கிறார்களல்லவா! அவற்றைமட்டும் மூடிமறைத்துவிட்டேன் — 'இரும்புத் திரை' ஒன்றை ஏற்படுத்திவிட்டேன், மிகச் சாமர்த்தியமாக! இல்லையென்றால், இங்கிலாந்து அரசாங்கம் என்னை எப்படி ஒரு இராஜதந்திரி, ஆளத்தகுதியுடையவன், என்று மதிக்கும்?

அரசாங்கம் தருகின்ற செய்தி தவிர எந்தச் செய்தியும் வெளியிலே போகாமலிருக்க, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டேன்!

ஆனாலும் உலகின் பலமூலைகளிலிருந்தும் பரபரப்பு ஏற்படத்தானே செய்கிறது! அதை எப்படி நான் தடுத்துவிட முடியும்? தடுப்பது ஒருபக்கமிருக்கட்டும், எனக்கு ஏன் அந்தக் கவலை?

"நன்றாகச் செய்தாய் — நீதான் தகுதியுடையவன்!" என்ற 'சபாஷ்' பட்டம் கிடைக்கும், இங்கிலாந்து ஆட்சியாளரிடமிருந்து! அது போதுமே எனக்கு!

உலகம் கண்டிக்கப்போவதெல்லாம் அவர்களையே தவிர, என்னையல்ல!

அப்படிக் கண்டனக் கணைகள் வரக்கூடும் என்று தெரிந்துதானே, என்னவோ, இங்கிலாந்து பாராளுமன்றத்தில், குடியேற்ற நாடுகளின் செயலாளர் லெனுக்ஸ் பாயிட் என்பார் திடீரென்று ஒரு அதிர்வேட்டை எழுப்பினர்!

"வெள்ளையர்களையெல்லாம் கொன்று குவிக்க மாபெரும் சதி நியாசாலாந்தில் நடைபெறுகிறது" என்றொரு புரளியைக் கிளப்பினர்!

எனக்கே வியப்பாக இருந்தது—நமக்குத் தெரியாமல் அவருக்கு எப்படித் தெரிந்தது என்று எண்ணினேன், அதிலே அடங்கியிருக்கிற 'சூசகம்'—'இராஜ தந்திரம்'—எனக்குப் புரிந்தது! அந்தத் துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி எதையும் சாதித்துக் கொள்ளலாம், உலகத்தின் கண்களில் மண்ணைத்தூவி எதிர்ப்புகள் எழாமல் பார்த்துக்கொள்ளலாம், அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி நீக்ரோவர்களைப் பணிய வைத்திடலாம்; என்று அவர்கள் திட்டமிடுகின்றனர், அவ்வளவுதான்!

திட்டமென்னவோ நன்றாகத்தான் இருக்கிறது! ஆனல் எந்த அளவு நடைமுறைக்குப் பயன்படக்கூடியது, நல்ல பலன் தரவல்லது, என்று இங்குள்ள நிலைமைகளைப் புரிந்துகொண்டிருக்கிற எனக்கல்லவா தெரியும்! ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்றவர்களுக்கு—அதுவும் ஆசையால் பார்வை பழுதானவர்களுக்கு, கருத்துக் குருடானவர்களுக்கு — எப்படிப் புரியும்?

கனவுக்கொரு நிக்குருமா—கென்யாவுக்கு ஒரு கென்யாட்டா—டியூனிஸியாவுக்கு ஒரு பருக்வியா — மால்டாவுக்கொரு மின்டாப் — சைப்ரசுக்கொரு மகாரியாஸ்—நியாசாவுக்கொரு பண்டா!

இதைப் புரிந்துகொள்வார்களா இங்கிலாந்தின் ஆட்சிப்பீடத்திலிருப்போர்?

மாக்மில்லன்

"ஏகாதிபத்தியம் வரலாற்றின் பழங்கதை" என்று இப்போதுதான் சொல்லி முடித்தேன்-இரஷ்யாவில்! அதற்குள்ளாகவா இப்படிப்பட்டவொரு சோதனைக் கட்டம் வந்து தொலையவேண்டும்?

சைப்ரசுக்கு விடுதலைகொடுத்துவிட்டோமே என்ற தைரியத்தில், இப்படியெல்லாம் பேசிவிட்டேன்! ஆனல்...! என் பேச்சையும், நடவடிக்கைகளையும் உலகம் எடைபோடுவதற்கான வாய்ப்பு இவ்வளவு விரைவிலா ஏற்படவேண்டும்?

பாம்பென்றும் தாண்ட முடியவில்லை—பழுதையென்றும் மதிக்க இயலவில்லை! தவிக்கின்றேன், இரண்டுங்கெட்டான் நிலையில்!

நியாசாலாந்தில் போராட்டம் நடத்துவோரது உள்ளம் எனக்குப் புரிகிறது — உரிமை வேட்கையை எதிர்த்து எந்தச்சக்தியும் வெற்றிபெற முடியாதென்பதை உணருகிறேன்' ஆனல்...நான்... அவ்வளவு எளிதில்......கோரிக்கைக்கு இணங்கிவிட முடியாத இக்கட்டான நிலையில் இருக்கின்றேன்!

இணங்கிவிட்டால், என்னைப் பற்றி என்ன நினைப்பர், என் நாட்டிலுள்ள இராஜதந்திரிகள்? சர்ச்சிலின் பரம்பரையிலே வந்தவன் நான் என்று எப்படித் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்?

என்ன காரணத்தாலோ இப்போது, பிரச்சனைகளை நீட்டிநெளித்து, வளைவு சுளிவுகளைக் கூறி, வம்பளந்து, பரிகாரம் தேடும் பணியைத் தள்ளிவைப்பதுதான் இராஜதந்திரமெனக் கருதப்படுகிறது உலகமெங்கணும்—சிறப்பாக என் தாயகத்தில்!

அண்மையிலே நான் சோவியத் யூனியனுக்குச் சென்றபோது; எந்தப் பிரச்சினையிலும் பிடிகொடுக்காமல், தீர்வுகாண முயலாமல், மிகச்சாமர்த்தியமாகத் தப்பிவந்ததாலே; என்னை மிகப்பெரிய இராஜதந்திரி என்று போற்றியது என் தாய்நாடு!

"அரசியல் வாதிகள் பற்களை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ளவேண்டும்" என்று குருஷேவ், தனக்குப் பல்வலி என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டியபோது "அதுசரி, உங்கள் பற்கள் கூர்மையானவையாயிற்றே" என்று நான் கிண்டலாக மட்டம் தட்டியதைக் கொட்டை எழுத்துக்களிலே பிரசுரித்தன பத்திரிகைகள்!

இவ்வளவு சாமர்த்தியமாகப் பேசியவரா நியாசாலாந்து பிரச்னையிலே ஏமாந்துவிட்டார் என்று அதே பத்திரிகைகள் நாளைக்குக் கேள்விக் கணையைத் தொடுத்தால் என்ன செய்வேன்?

இந்த நாட்டு ஆதிக்கத்தை அவ்வளவு எளிதில் விட்டுக்கொடுத்துவிடக் கூடாது என்ற 'பிகு'வில் அடக்குமுறைப் பாணங்களை அள்ளி வீசினலும் தொல்லை ஏற்படாமல் இருக்கப்போவதில்லை!

அடக்கு முறைகள் எவ்வளவு நாட்களுக்குப் பயன்படும் என்பதுகூட அல்ல முக்கியம்!

ஆனல், அந்த முறைகளை நான் கையாண்டால், உலகமே என்னைத் தூற்றத் துவங்குமே, அதற்கு நான் என்ன செய்வேன்?

"இப்போதே "ஸ்பெக்டேடர்" என்ற இதழ் கண்டித்துவிட்டது—'டெய்லிமிர்ரர்" என்ற பத்திரிகையும் கண்டனக்கணை தொடுத்துவிட்டது — "சைபரசை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்" என்று அச்சுறுத்துகிறது, அமெரிக்காவிலிருந்து வெளிவருகிற "டைம்" என்ற ஏடு!

என்ன செய்வேன்? சூயஸ் பிரச்சனை, எனக்கு முன்னுலே இந்த நாட்டின் பிரதமராயிருந்த ஈடனின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. இந்தப் பிரச்சினை, எனது ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டால்......? காலமே! நீதான் என் தலைவிதியைக் கணிக்க வேண்டும்!

இலக்கியத்துக்கு ஓர் இலட்சியம் உண்டு. மனிதர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கை இலட்சியத்தை நினைவுபடுத்துவதே இலக்கியத்தின் முக்கிய வேலை. மனிதர்களுடைய வாழ்வில் தன்னம்பிக்கையையும் தெம்பையும் ஊட்டுவதே இலக்கியத்தின்நோக்கமாயிருக்கவேண்டும்.

ஏழைகள் தந்த பணம்

—[கா. சு. அறிவுக்கொடி]—

காங்கிரஸின் பெரும் தியாகி, நாட்டு நலத்திலே அக்கறை கொண்ட நல்லவர், மக்கள் உள்ளத்திலே சுதந்திரக்கிளர்ச்சியைத் தட்டி எழுப்பியவர், வெள்ளை ஏகாதிபத்தியத்தை இந்த நாட்டில் இருந்து விரட்டியடிக்கப் பாடுபட்டவர். அவரது எண்ணங்கள் வாழ்க்கைக் கோட்பாடுகளை நாமும் நாட்டு மக்களும் பின்பற்ற வேண்டாமா?

காந்தியடிகளின் கோட்பாடுகளைப்பின்பற்றிடவேண்டும்என்று முழக்கமிட்டார்கள் மேடையளவில்—வாயளவில். ஆனால் செயலளவில் என்ன செய்கிறார்கள் என்றால் உல்லாச ஊட்டியிலே சல்லாபமாகச் சட்டசபை நடத்த வேண்டும் என்று ஊட்டியை சட்டசபையாக்குகிறார்கள். ஊட்டியிலேசட்டசபையைக்கூட்டி ஊட்டி செய்யாதீர்கள். வெள்ளை ஏகாதிபத்தியம் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? ஊட்டியிலே தான் சட்டசபையை கூட்ட வேண்டுமா? இப்படி அக்கிரமச் செயலிலேஈடுபடுகிறது, ஆணவப் போக்கிலே மக்கள் தந்த வரிப் பணத்தை வாரி இறைத்துப்பாழ் படுத்துகிறது. இதனை மக்கள் கண்டித்தேதான் ஆகவேண்டும்--என்று வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உதகை சட்டசபைக் கூட்டத்தைக் கண்டித்து ஆர்பாட்டங்கள் செய்தார் சத்தியமூர்த்தியும், அவரது காங்கிரஸ் சகாக்களும். அவருடைய கூற்று முற்றிலும் சரி. ஆனால் இப்பொழுது நமது மாநில அமைச்சர்கள் சத்தியமூர்த்தியைப் புகழ்ந்து அவரது வாய்மொழியை தட்டாது, அவர் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று முழக்கமிட்டு, அதே நேரத்தில் இன்று சத்தியமூர்த்தியின் சத்தியம் தவறாத கோட்பாடுகளுக்கு — நல்வழிகளுக்கு கல்லறை கட்டிவிட்டு ஊட்டிக்குப் போக எத்தனித்து இருக்கிறார்கள். "காந்திய வழியிலே நாட்டை நடத்தவேண்டும், அவரது பொன்மொழிகள் நமது இதயத்திலே பொறிக்கப்பட வேண்டும். முதல் சுதந்திரக் கிளர்ச்சியை நாட்டு மக்களிடையே கொழுந்துவிட்டு எரியச்செய்த பெருமை அவரையேசாரும். அவர் பின்பற்றிய ஒவ்வொரு நல்வழிகளையும்நாம்பின்பற்றித் தேசசுபிட்சத்தில் ஈடுபடுவோம். அந்த சுதந்திரத் தாகம் கொண்ட தந்தைக்கு நமது கடமை என்ன? அவர் வழியிலே நாட்டை நடத்துவதுதான். அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்பதை எண்ணும்போது கண்கள் குளமாகிறது. அவரைப் பிரிந்தாலும் இனி நமது இதயங்களிலே அவரது மங்காத புகழை நிலைநாட்ட வேண்டும். அதுவே அந்த மகானுக்கு நாம் செய்யும் நன்றி"— காந்தியடிகளின் பிறந்த நாளிலும் மறைந்த நாளிலும் காந்தியடிகளைப்பற்றிக் கண்கலங்கப் பேசுகிறார்கள் — உத்தமரை உள்ளத்தில் இடம்பெறச் செய்துள்ள அவரது சீடர்கள், ஆனால் அடிகளார் கூறியது என்ன?

"இந்தியா ஏழை நாடு. ஆடம்பரமான அனாவசியமான செயல்களிலே நாம் இறங்கக்கூடாது. ஆடம்பரமான வாழ்வே மக்களது வறுமைக்குகாரணம். ஆடம்பரத்தை ஒழித்தால்தான் வறுமை ஒழியும், வறுமை ஒழிந்தால்தான் இந்நாட்டு ஏழை மக்களின் இல்லங்களிலே இருளகற்றமுடியும். ஏழைகள் தரும் ஒவ்வொரு காசும் சுபிட்சத்திற்கு ஆணிவேர். அவர்கள் முன்னேற்றம்தான் நாட்டின் முன்னேற்றம்..." என்று காந்தி மகான் கூறிச்சென்றார்.

அவரதுவாய்மொழியைக்கேட்டு அதனைப் பொன்மொழியாய்ப் பொறித்து இருக்கிறோம் என்றும் நமது அமைச்சர்கள் கூறினார்கள்.

அந்த மகான் கூறிச்சென்ற வாய்மொழியை இந்தக் காதிலே கேட்டு அந்தக் காதிலே விட்டு விட்டார்கள் நமது அமைச்சர்கள். இது என்ன நியாயமா...? உள்ளத்திலே பூஜிக்கிறோம் என்ற அமைச்சர்கள்உதட்டளவில்கூடப் பூஜிக்க மறுக்கிறார்கள். உத்தமரின் உன்னதமான சொல்லை மண்ணுக்குள் புதைத்துவிட்டு — காந்தியாரின் கோட்பாடுகளை கைகழுவி விட்டு, உதகை நோக்கி உல்லாசம் பெறப்போகிறார்கள் அமைச்சர்கள். ஏழைகள் தந்த பணம் ஊட்டியிலே உல்லாசத்திற்கு வாரி இறைக்கப்படுகிறது. ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி எடுக்கப்பட்ட பணம் உதகையிலே புது இரத்தம் ஏற்றிக்கொள்ளப் பயன்படுகிறது — என்ற செய்தி, காந்தியிருந்தால்— அவர் காதிலே விழுந்திருந்தால் கண்ணீர் வடித்திருப்பார். ஆனால் காந்தியடிகள் வடிக்காவிட்டாலும் அவரது தோழர்களான ஏழைகள் வடிக்கப் போகிறார்கள்.

நமது முதலமைச்சர் கடந்த திங்கள் சுற்றுப்பிரயாணத்தின் போது ஒரு கூட்டமொன்றில் பேசினார், 'கோடிக்கணக்கான மக்கள் சோறின்றி — உடையின்றித் துயரப்படுகிறார்கள் என்பதை அறிவேன். இந்த நிலையை இந்த நிலத்தில் இருந்து விரட்டியடிக்கத்தான் பாடுபட்டு வருகிறது காங்கிரஸ்' — என்று பேசினார். இன்று உதகையை நினைக்கும் போது, இதுவெல்லாம் மேடையின் ஜோடனை என்றுதான் எண்ணவேண்டி இருக்கிறது — உதட்டிலே உண்மையும், உள்ளத்திலே கள்ளமும் கொண்டவர்கள் என்பதை உணரவேண்டித் தான் இருக்கிறது. ஒரு பள்ளிக் கூடத்தைத் துவக்கிவைத்தநேரத்திலே நமது மதிப்பிற்குரிய நிதி மந்திரி பேசியிருக்கிறார், 'ஏழைகள் தந்த பணத்தை வீண் செய்து

விரயமாக்கிவிடாதீர்கள்' என்று. ஆனால் அதே நேரத்தில் ஊட்டியை நினைக்கும்போது என்ன நினைக்கவேண்டி இருக்கிறது? சாராயம் காய்ச்சுவதைத் தீவிரமாக ஒழிக்கப் பாடுபடுகிறோம் என்றாராம்' ஒரு மேடைப் பிரசங்கி. அடுத்த நாள், அவரே கள்ளத்தனமாகக் குடித்தாராம். 'இப்படி மேடையிலே பேசிவிட்டு நீங்களே செய்யலாமா' என்று ஒருவர் கேட்டபோது, 'ஊருக்குத்தான் சொன்னேன், உனக்கும் எனக்குமா சொன்னேன் என்றாராம். ஆகா! இக்கூற்று எவ்வளவு பொருத்தம்! பள்ளி மாணவர்கள் பணத்தைப் பாழ்படுத்தாதீர்கள் என்று பறைசாற்றிவிட்டு உதகை உல்லாசத்திற்குத் தலைமை வகிக்கிறார்! மக்கள் மன்றம் சிந்தித்துப் பார்க்கட்டும் இது நியாயந்தானா என்று? இன்று நாடு இருக்கும் வறுமையில் ஊட்டிவாசம் உகந்ததா? சட்டமன்றத்தை அங்கு நடத்துவது முக்கியம்தானா? என்ற எண்ணமெல்லாம் மக்கள் மன்றங்களில் பெரும் பிரச்சினையாக மாறுகிறது. ஆடம்பரச் செலவுகளையும் வீண் செலவுகளையும் குறைத்துக் கொள்வதாகக் கூறிக்கொள்ளும் சென்னை அரசாங்கம் இந்த வழியைப் பின்பற்றி இருப்பது எல்லோரது உள்ளத்திலும் கசப்பை ஏற்படுத்தி வெறுப்பைத் தேடிக்கொள்கிறது. இன்று லட்சக்கணக்கான மக்கள் வேலையற்று—வாழ வழியற்று நிற்கின்றனர். சாமானிய மக்கள் போதிய வருவாய் இன்றிக் கொடிய வறுமையில் துயர்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் பல மாவட்டங்களில் பயங்கரமான பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நாட்டின் புனர்வாழ்வுக்காகத் தீட்டப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை. சேமிப்பு என்ற முறையில் மக்கள் பலரிடமும் பல்லைக் கெஞ்ச வேண்டி இருக்கிறது. வரி என்ற பெயராலே வதைக்கவேண்டி இருக்கிறது — சுதந்திரம் பெற்று பதினொரு ஆண்டுகளாயும்.

அயல் நாடுகளின் உதவியைக் கையேந்த வேண்டி இருக்கிறது இன்று. இந்த நிலையிலே, தாய் பிச்சை எடுக்க மகன் தானம் செய்வதுபோல், மக்கள் வேலை கொடு அல்லது சோறுபோடு என்று வயிற்றுப் போராட்டத்திற்கு வழி காணாது கண்கலங்கி நிற்கும் காட்சி மனதை உருக்குகிறது. இந்த நிலையிலே இந்த ஆடம்பரமான — அனாவசியமான செலவுகளைச் செய்யவேண்டிய அவசியம் இருக்கலாமா.

வெள்ளையன் ஊட்டிக்குப் போனான் என்றால், அவன் பொறுப்பற்றவன்—ஏகாதிபத்தியக்காரன்-இந்த நாட்டினரை அடிமைகள் என்று நடத்தியவன்—அவனது செய்கைக்கு ஆதரவாக செய்வீர்களேயானால் — நீங்கள் இந்த மாநில மக்களிடத்தில் கசப்பையும் வெறுப்பையும் பெற்றே தீருவீர் — நீங்கள் இந்த மாநில மக்களை அடிமைபோல் நடத்திச் செல்கிறீர்கள் என்றுதான் எண்ணவேண்டும். எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டால் ஒழிய உதகைக்கு போகவே மாட்டோம் என்று நிதியமைச்சர் கூறினார். எதிர்க்கட்சிகள் வேண்டாம் என்று தடுத்தாலும் அதனை மறுத்து, இடதுசாரிகள் எதற்கெடுத்தாலும் இடைஞ்சல் செய்து கொண்டுதான் இருப்பார்கள்; அதற்கெல்லாம் அஞ்சினால் முடியாதுதான் போகிறதா. "மலைபோன இன்னல் மலிந்திட்டபோதும் உதகையை நோக்கி ஓடியே தீருவோம்" — என்று கவிதை பாடுவது காங்கிரஸ் கட்சிக்கு கண்ணியம்தானா? எதிர்க்கட்சியை மதிக்கும் தன்மை ஆட்சியாளருக்கு வரவேண்டும். எதிர்க்கட்சியை மதிக்கும் ஆட்சி மக்களிடத்தில் மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெறமுடியும்.

எதற்கெடுத்தாலும் ஏதோ ஒரு முட்டுக்கட்டையைப் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்று ஒதுக்கித் தள்ளுவது ஆணவமும் — அதிகாரமும்தான் என்றே கருதவேண்டும். அரசன் தவறான பாதையில் நடக்கிறான் என்றால், அதனைத் தடுத்து நிறுத்தி அவனது போக்கை நேரிய வழியிலே திருப்பத்தான வேண்டும். தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று தவறான வழியிலே நடந்து, அறிவிழந்து அரசின் அழிவை தேடிக்கொள்வது அறிவுடைமை ஆகாது.

தனயன் தவறான வழியிலே தாறுமாறாகத் திரிவதைத் தந்தை கண்டிப்பதைப்போல், சென்னை மாநில அமைச்சர்கள் இப்படி செருக்காகச் செலவழிப்பதை எதிர்க்கட்சிகள் எடுத்துக் கூறுவதில் எவ்வளவு தவறில்லையே? அப்படித்தான் இலட்சக்கணக்கில் ரூபாயை வாரி இறைப்பதில் ஏதாவது பயன் உண்டா? — என்று கேட்ட நேரத்தில், சட்டமன்றக் கூட்டத்தை உதகையில் நடத்துவதின் காரணமாக உதகை மக்களின் வாழ்க்கைத்தரம் உயரக்கூடும் என்றும். உதகைக்கு என்றும் ஏற்படாத புதியதோர் உயர்நிலை ஏற்படக்கூடும் என்றும் பேசியிருக்கிறார், இது கீழ்ப்பாக்க வாசிகள் பேசவேண்டிய பேச்சு' இந்த நாடு சுதந்திரம் அடைந்து பதினொரு ஆண்டுகளை அடைந்து விட்டது. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம், உயர்ந்ததாக இல்லை. நெசவாளர்கள் தலையிலே மூட்டை முடிச்சு! என்ன இந்தக் கோலம் என்றால், வறுமையின் கொடுமை என்பது வழக்கமாகப் போய்விட்டது குடும்பம் குடும்பமாக படையெடுப்புக் குறைந்தபாடில்லை இந்த நிலையில் பத்து நாளில் பணத்தையெல்லாம் பாழ்படுத்தி உதகை மக்களின் உள்ளப் புயலை மாற்றிவிட முடியுமா? உதகையில் பணிபுரிய வாய்ப்பில்லாது இருக்கும் நூற்றுக்கணக்கானோருக்கு வேலை தருவதின் காரணமாக அப்பகுதி மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட முடியுமா? என்பதைப் பொதுமக்கள் நன்கு சிந்திக்கட்டும். உதகை செல்வதின் காரணமாய் யாருக்குப் பயன்? மந்திரிகள் — சட்டமன்ற உறுப்பினர்கள் முதலியோரது அலவன்சு, ஓட்டல் கடைக்காரர்களுக்குத்தான் பயன்படுமேயொழிய உதகைப் பகுதி மக்களுக்கு ஒரு வசதியும் ஏற்படாது. ஒரு பத்து நாட்களுக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களில் சிலருக்கு மட்டுமே அப்படித்தான் கால் அரை வயிறு சோறு கிடைக்குமென்றே வைத்துக் கொள்வோம். அப்படியே கால் அரை வயிறு சோறு கிடைத்துவிட்டால் அவர்களது வாழ்க்கைத்தரம் மேன்பட்டுவிடுமா...? அதுவும் இல்லை.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினையில் முடிவுகாணாத பொறுப்பற்றதனம் — அங்கே சட்டமன்

றத்தை நடத்தினால் வாழ்க்கைத் தரம் உயரக்கூடும் என்பது பைத்தியகாரத்தனம்! உதகையின் செல்வ வளத்தை ஆராய்ந்து அதற்குரிய செயலில் ஈடுபட்டு வளமாக்கினால்தான் வாழ்க்கைத் தரம் உயரக்கூடும். உதகைக்குப் போக வேண்டுமானால்—உல்லாசத்தை அனுபவிக்க வேண்டுமானால் தாங்களாகவே அமைச்சர்களுக்கு ஒதுக்கியுள்ள தனிப் பங்களாவில் தங்கி உல்லாசம் அனுபவிக்கட்டும். இதையாரும் தடுக்க முடியாது. ஆனால் மக்கள் தந்த காசு நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தி-மக்களின் நரம்புச்சக்திகளைப் பிழிந்தெடுக்கப்பட்டு நேரிய முறையிலே ஆட்சிசெலுத்தக் கொடுத்த பணம் அது. அந்தமுறையிலே வந்த பணத்தை இப்படி மாறிய முறையிலே வாரி இறைப்பது சரியாகாது.

ஆரன்மூர் அரண்மனை—அதன் வாடகை-அதனைப் பாதுகாப்பது, சீர்படுத்துவது உல்லாசம் அனுபவிப்பது இப்படியாக மூன்று இலட்ச ரூபாயை—மக்களுடைய பணத்தைப் பயன்படுத்துவது — பாழ்படுத்துவது நேர்மைதானா? இந்தப் பணத்தில் ஏழைகளுக்காக—ஏதாவது தொழிலுக்காகப் பயன்படுத்தினால் அந்தப் பெருமை சென்னை அரசாங்கத்திற்கு — நமது அமைச்சர்களுக்கு சேரும். அதனை மறுத்து நாடு வறுமைக் கோலத்தில் வாடிக் கொண்டிருக்கையில் மாதாவைப் பட்டினிபோட்டு மகேஸ்வர பூஜை நடத்துவதுபோல் செய்கிறது சென்னை அரசாங்கம். சட்டமன்ற உறுப்பினர்க்கு உதகை சட்டமன்றக் கூட்டம் நடத்துவதுகேட்டு ஆமாம்போடுவது அறிவற்ற செய்கை! ஏழைகளுக்காகப் பாடுபடுகிறேன் என்று வாங்கப்பட்ட ஒவ்வொரு உங்களுடைய வாக்குறுதிகளுக்கும் மனச்சாட்சிக்கும் மகத்தான துரோகம் செய்கிறீர்கள்—இது ஏழைகளுக்கு மனசாட்சிப்படி செய்கிற மாபெரும் துரோகம். இந்தத் துரோகச் செயல், நீங்கள் மறந்தாலும்—உங்களை ஏழை மக்கள் மறக்கமுடியாது. நீங்கள் மறுத்தாலும் — உங்களுடைய ஏழை மக்கள் மறுக்க முடியாது என்பதை நன்கு சிந்தித்து உணர்ந்து கைவிடுங்கள்.

மக்கள் கண்கலங்கி நிற்கையிலே அவர்களது பணத்தைக் கண்டதே காட்சி கொண்டதே கோலமாகக்கொள்வது நீதியல்ல. 'எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவாகக் கொண்டு, தவறில் இருந்து திருந்துவதுதான் சிறந்தது. அதனால் கண்ணியமோ மதிப்போ குறைந்துவிடப் போவதில்லை. வெள்ளையனின் பிரதிநிதியாகப் போகிறோம் என்பதை வெளியில் காந்தியின் வாக்கை கல்லறையில் மூடிவிட்டு—காலில் போட்டு மிதித்து களங்கப்படுத்திவிட்டு உதகை செல்கிறீர்கள். இனி காந்தியின் பெயரையோ அகிம்சையின் பெயரையோ சொல்லி ஆட்சிப்பீடத்தில் அமர முடியாது.

உத்தமர் வற்புறுத்திய-கடைப்பிடித்த எளிய வாழ்க்கையைப்புறக்கணித்துவிட்டுப்புறப்படுகிறீர்கள். கட்சியின் பெயராலோ கொள்கையின் பெயராலோ இதைச்சொல்லவில்லை. நல்லவழி அல்ல என்ற முறையிலே கைவிடுங்கள். பொதுமக்கள் தந்த பணத்தை—வரியென்ற பெயரிலே வாங்கப்பட்டதை நமது அமைச்சர்கள் பொறுப்பற்றதனத்திலே போக்கிவிடப்போகிறார்கள் நமது அமைச்சர்கள். இதை காந்தியார் இருந்திருந்தாரேயானால் நிச்சயமாக தடுத்திருப்பார் என்பதில்சந்தேகம்வேண்டாம். காந்தியடிகள் இருந்திருந்தால் கட்டாயமாகக் கண்டித்திருப்பார். ஏழைகளின் கண்ணீரில் தோய்த்தெடுக்கப்பட்ட பணம் உதகையிலே உதவாக்கரையாக உல்லாசம் மகிழ உபயோகப்படுவதைத் தமிழ் மக்கள் உறுதியோடுநின்று இதனைத் தடுத்தே தீரவேண்டும். எண்ணற்ற ஏழை மக்களின் துயரக் கண்ணீரிலே துடைத்தெடுக்கப்பட்ட இலட்சக்கணக்கான பணம் பாழாவதை தமிழ்மக்கள் தடுத்தே தீரவேண்டும். ஏழைகளை உருக்கி எடுக்கப்பட்ட பணம் உதகையிலே உல்லாசத்திற்கு உபயோகிக்கக் கூடாது என்பதை உண்மையாக்க தமிழ் மக்கள் தடுக்கத்தான் வேண்டும்—இதனை மறுத்து—தமிழர்களை மதிக்காது அமைச்சர்கள் உதகைசென்றார்களேயானால், தமிழ் மக்களின் பேரெதிர்ப்புக்கு ஆளாகநேரிடும். ஏழைகளின் உள்ளப்புயலை உருவாக்கவேண்டாம்!

ஏழைகளின் சார்பாக—மக்கள் மன்றத்தின் சார்பாக இதை கூறுகிறோம். பொதுமக்களின் வரிப்பணத்தை மிகமிகச் சொட்டைச்செலவழித்து அதிலும் தக்கபயன் தரக்கூடிய பணிக்கு மட்டுமே பயன்படுத்தி மக்களின் பேரன்பையும் நம்பிக்கையையும் பெறுவதுதான் நல்லாட்சியின் இலட்சணமாகும்!

ஏழைகள் தந்த பணம் ஏழைகளின் இல்லங்களில் இருளகற்ற—ஏழைகள் தந்த பணம் ஏழைகளின் அடுப்பை எரிக்க, ஏழைகள் தந்த பணம் ஏழை ஏழையாக வாழ்வதை தடுக்க, ஏழைகள் தந்த பணத்தை, ஏன் என்று எடுத்துக் கேட்க எவரும் இல்லை; எப்படி வேண்டுமானாலும் ஏராளமாய் எடுத்து இறைக்கலாம் என்று எண்ணிக்கொண்டார்களா சென்னை அமைச்சர்கள்? ஏழைகள் தந்த பணம் உல்லாச வேலைக்காக அல்ல—ஏழைகளின் கலங்கிய கண்ணீரைத் துடைக்க உதவும் துண்டாகவாவது பயன்பட வேண்டாமா?

★

குழந்தைகளின் மனநிலைகளுக்குத் தகுந்த தொழிலைப் பின்பற்றும்படி பெற்றோர்கள் விட்டுவிடுவது நலம். வேறுவிதமாக வற்புறுத்துவது கசந்த மனநிலையையே உண்டுபண்ணும்.

*

குடும்ப வாழ்க்கையில் தான் மனிதன் மனநிலை பல கட்டுப்பாடுகளாலும் துன்பங்களாலும் புனிதமான உலகத்தை அடைகிறது. கஷ்டத்தில் களங்கம் சலவை செய்யப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் மனத்தூய்மை கெட்டிப்படுகிறது; பொறுப்பிலே உறுதி நிலவுகிறது; ஓடிப்போகும் மனப்பான்மையும் மாறிவிடுகிறது.

மானேஜர் மார்க்கசகாயம்

'ஜோல்னா' பை சகிதமாக, தடபுடலாக ஆபீசுக்குள் நுழைந்தார், மானேஜர் மார்க்கசகாயம்! முழங்கால்வரை தொங்கும் ஜரிகை அங்கவஸ்திரம்—பொத்தான் இருந்தும், பயன் படுத்தப் படாத 'ஓபன் ஷர்ட்' நரைத்த தலை—அதைப் படியவைத்திடும் பொருட்டுப் பூசப்பட்ட 'வாசலின்' நறுமணம்—பவுடரோ என்று, பார்ப்போர் எண்ணும் வகையில், பாதி வழியிலே கலைக்கப்பட்ட திருநீறு—இத்தனையும் உண்மையில் இரசிப்பதற்குரியகாட்சி தான்! இல்லையென்றால் அலுவலகத்திலிருந்தோர் அவ்வளவு பேரும் அவரைக் கண்டவுடன் அவ்வளவு பரபரப்பு அடைவானேன்!

அன்று அவர் வழக்கத்திற்கு மாறாக $10\frac{1}{2}$ மணிக்கே அலுவலகத்திற்கு வந்ததுதான் காரணமாக இருக்குமோ? யார் கண்டார்கள்!

ஆனால் எனக்கிருந்த சந்தேகம் வேறு! அதனால் மெள்ள அவரிடம் போனேன்! குரலைத் தாழ்த்திக் கொண்டு, "சார், மணி என்ன?" என்றேன், நாசுக்காக! என் கேள்வியின் பொருள் அவருக்குப் புரியக்கூடாதல்லவா! அவரோ சட்டைப் பைக்குள் கையை விட்டார்! "ஆபீஸ் கெடிகாரத்திலே பார்" என்று சொல்லிவிடப் போகிறாரோ என்று பயந்துகொண்டே இருந்தபோது, பையிலிருந்து கடிகாரம் வெளியே வந்தது! அதைக் கூர்ந்து பார்த்தார். அடுத்த வினாடி $11\frac{1}{2}$ என்று பதில் வந்தது அவரிடமிருந்து! என் சந்தேகம் சரியானதுதான், அவர் கடிகாரத்தில் தான் கோளாறு, என்று எண்ணிக் கொண்டேன்! வெற்றிப்புன்னகை எனக்கு--மெள்ள என் ஆசனத்தில், அவருக்கு அருகில்தான், — அமர்ந்தேன்!

ஆனால் அவர் எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. 'ஜோல்னா' பையிலிருந்து காகிதக் குப்பைகள் அனைத்தும் ஒவ்வொன்றாக, அவரது மேஜையின்மீது இடம்பிடித்துக் கொண்டிருந்தன!

மேஜை நிறைந்துவிட்டது—பையும் காலியாகிவிட்டது! சட்டைப் பையிலிருந்த கடிகாரம் 'பிளாட்டிங்' பேப்பரின் மேல் இடம் பெற்றது!

அன்று வந்த கடிதங்களைப் பார்க்க ஆரம்பித்தார். இடையிடையே பேச்சுக்கள்—பார்சல் கிளார்க் பரமானந்தத்திடம்—அக்கவுண்டண்ட் ஐயாசாமியைப்பற்றி! காரணம், அன்று ஐயாசாமி ஆபீசுக்கு லீவு போட்டிருந்தார்!

என் கண்கள் கணக்குப் புத்தகத்தில்—காதும் கருத்தும், மானேஜரின் வாயிலிருந்து உதிர்கின்ற முத்துக்களில்!

கடிதம் ஒவ்வொன்றையும் அவர் படித்த காட்சி! அப்பப்ப! மனதிற்குள்

" முகில் "

படித்துப் பழக்கப்பட்டவரல்ல அவர். எனவே ஒவ்வொரு கடிதத்திலும் என்ன எழுதப்பட்டிருந்தது என்று பார்க்காமலே புரிந்துகொள்ளும் வாய்ப்பு, வழக்கம்போல், அலுவலகத்திலிருந்த எங்கள் அனைவருக்குமே கிடைத்தது!

"நீங்கள் எழுதிய கடிதம் கீழே கிடந்து நேற்றுத்தான் கிடைத்தது." என்று மானேஜர் படித்துக்கொண்டிருந்தபோது, நாங்கள் அனைவரும் அவரையே பார்த்தோம். அவரோ துள்ளி எழுந்தார்.

"தபாலாபீசிலிருப்பவர்கள் எப்படிக் கடிதத்தை கீழே போடலாம்?... இந்தாப்பா பரமானந்தம்... இங்கே வா!... உடனே ரிபோர்ட் எழுது...! உம்! நான் சொல்லுகிறபடிஎழுது!..." என்று எழுதவேண்டியவாசகங்களைப் பேசித் தீர்த்தார். பரமானந்தமும் எழுதினார், மிகுந்த பரபரப்போடு!

நான் மெதுவாக, எதையோ தேடுவதைப்போல், அவரது மேசைக்கருகில் போனேன்—கடிதத்தை ஓரக்கண்ணால் படித்தேன். "கீழக்கரையில் நேற்றுத்தான் கிடைத்தது" என்று எழுதியிருந்தது. பின் ஏன் அவர் அப்படிப் படித்தார்? பாவம்! ஏதாவது அவசரமாக இருக்கும், வேறென்ன? அந்த முடிவு சரியானதுதான் என்பதற்கு மற்றொரு ஆதாரமும் கிடைத்தது. அந்த ஆதாரத்தைக் கொடுத்தது, மேஜையிலிருந்த கடிகாரம்தான்! ஆம்! அதில் அப்போது மணி 10-35!

கைக்குட்டை முழுவதையும் வாய்க்குள்ளே திணித்து, சிரிப்பை அடக்க, என்னாலானவரை முயன்றேன்! சிரித்தால்......? ஐயயோ, நினைக்கவே பயமாக இருக்கிறது!

மானேஜர் மார்க்கசகாயத்தைப் பொறுத்தவரையில் அவரிடம் சிரித்தவர்கள் அழுதாகவேண்டும்—அழுதவர்கள், அழுதுகொண்டே இருந்தாக வேண்டும்! அவ்வளவு கண்டிப்பான பேர்வழி, தொழிலாளிகளைப் பொறுத்தவரையில்!

திடீரென்று என் சிந்தனை தடைபட்டது. காரணம் டெலிபோன் மணி! ரிசீவரைக் கையில் எடுத்தேன்!

அதற்குள் மானேஜர் என்ன நினைத்தாரோ, "இங்கே கொடு" என்று வாங்கிக்கொண்டார்.

இதற்கிடையில் வாட்ச்மேன் வரதன் வந்தான், "சார், $1\frac{3}{4}$ ரூபாய்க்கு குறைந்து கைவண்டி வராதாம் சார்" என்றபடி!

"வராதா! ஏன்?........உம்! உன் திறமையில் இடிவிழ!" மானேஜர் கர்ச்சித்தார், டெலிபோன் ரிசீவர் கையிலிருப்பதையும் மறந்து!

"சரி, சரி! காரை எடு! வண்டி கேட்கிற நேரம் நம்ம காரிலேயே கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்துவிடலாம்..." என்று சொல்லிக்கொண்டே ரிசீவரை ஞாபக மறதியாக டெலிபோனில் வைத்துவிட்டார்!

ஆனால் அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட அங்கு யாருக்கும் நேரமில்லை! 'நேரமில்லை' என்று நாசுக்காகச் சொல்லத்தானே எனக்கு உரிமை உண்டு.

டிரைவர் தம்புசாமி வரவழைக்கப்பட்டார். "சார், நம்ம கார் எப்படி சார் போகும்?" என்று கேள்வி பிறந்தது அவரிடமிருந்து!

"ஏன் போகாது? இதோ... நானும் வருகிறேன்!... போகிறதா இல்லையா பார்ப்போம்!... அடிக்கடி கிர்மாத்தித் தொலையறே! அதனாலேதான் கெட்டுப் போவுது...... இப்ப பார்ப்போம்" என்று சொல்லிய வண்ணம், பரப்பி வைக்கப்பட்ட காகிதக் குப்பைகளை ஒவ்வொன்றாக எடுத்து பைக்குள்ளே திணித்துக்கொண்டார்.

"சார்!...........நேத்துதானே சார் போலீஸ்காரங்க, நம்ம காரை சார்ஜ் பண்ணினாங்க!...லைட்டு சரியா இல்லைன்னு ஒரு இடத்திலே...பிரேக்கு நல்லா இல்லேன்னு ஒரு இடத்திலே...!"

"ஆமாமா! அதுக்குகூட கமிஷனர் கிட்டே போகணும், இப்பதான் ஞாபகம் வருது! ஏன்யா இவ்வளவு நேரம் இதைச் சொல்லக்கூடாது?"

என்ன பதில் சொல்லுவார் டிரைவர்? பாவம்! பைக்குள் கையைவிட்டு டிரைவர் லைசன்ஸ் பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டார்!

"பரமானந்தம்!......யோவ் பரமானந்தம்!" மானேஜரின் குரல், உச்சஸ்தாயியில் இருந்தது! வலதுகை மாதாந்திர காலண்டரைக் காட்டியது—முகமோ பேயறைந்ததுபோல் என்பார்களே, அந்த நிலையில்!

என்னமோ ஏதோ என்று எல்லோரும் காலண்டரைக் கவனித்தோம்! அதில் அன்றைய தேதியைச் சுற்றிச் சிவப்புப் பென்சிலால் ஒரு 'வட்டம்' போடப்பட்டிருந்தது!

அவரது நீட்டிய கரத்தின் பொருள் "இந்த வட்டம் ஏதற்காக?" என்ற கேள்விதான்!

வட்டமிட்டதே அவர்தான்—வேறு யாருமல்ல! முக்கியமான அலுவல் இருக்கிறதென்று அறிவிப்பதற்கென்று அப்படி வட்டங்களைப் போட்டு வைப்பது அவருக்கு வழக்கம்!

ஆனால் அந்த 'முக்கியமான' வேலை என்ன என்பதைக் கண்டுபிடிக்க, ஒவ்வொரு தடவையும் அவர் படும் பாடு! அப்பப்ப! சொல்லி முடியாது!

பரபரப்போடு பழைய படியும் பையிலே நுழைக்கப்பட்ட காகிதக் குப்பைகளை வெளியே எடுத்துப் போட்டார் — இல்லை, பரப்பினார் — மேஜைமீதுதான்!

ஒவ்வொன்றாகக் கிளறினார்! ஒரு மணிநேர 'ஆராய்ச்சி'க்குப் பிறகு அவருக்கு நினைவு வந்தது!

ஆம்! அன்றைக்கு ஒரு வழக்கு! அதுவும் முக்கியமான ஒரு வழக்கு! மானநஷ்ட வழக்கு!

கம்பெனியின் 'மான'த்தைப் பறித்ததாக வேறொரு கம்பெனியின் மீது, மானேஜரே தொடுத்த வழக்கு! இழந்த மானத்திற்காக ரூ. 2000 கொடுத்தாக வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது அவரால்!

இவ்வளவும் நினைவுக்கு வரவே நெஞ்சில் திகில் கண்டது — உடனே புறப்படச் சித்தமானார் — ஆபீஸ் காரில்தான்! நானும் ஏறிக்கொண்டேன்.

புறப்படும்போதே மணி 11—45!

"கால்மணி நேரத்துக்குள் ஹைகோர்ட்டுக்குப் போயாகவேண்டும்"—இது டிரைவருக்கு மானேஜர் இட்ட ஆணை — கடுபிடியான உத்தரவு!

கார் பறந்தது, ஏறக்குறைய 15-மைல் வேகத்தில்! அதற்குமேல் போனால் என்ன ஆவது?

வழி நெடுக டிரைவருக்கு 'ஆராதனை'கள்! சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொண்டார் அவர்! வேறு வழி!

ஒரு டர்னிங்!—நாற்சந்து! போலீஸ்காரர் ஒருவர் நின்றுகொண்டு சைகை காண்பித்த வண்ணமிருந்தார்!

அவருக்கென்ன தெரியும், மானேஜரின் அவசரம் பற்றி? எனவே கார் நிறுத்தப்பட்டது—மானேஜரின் பாக்கட் கடிகாரமும் இதயமும் போட்டியிட்டுக்கொண்டு 'டிக்டிக்' என்ற சப்தத்தை எழுப்பின!

எப்படியோ அங்கொரு 15-நிமிடங்கள். நந்தி வழிவிட்டது—அதாவது போலீஸ்காரர்போகுமாறு காருக்குச் சைகை காட்டினார்!

ஆனால்...? டிரைவர் திக்குமுக்காடினார்!

கிர் 'ஆக்ஸிலேடர்' இரண்டையும் மாறி மாறிப்போட்டார்—பயனில்லை! "ஸ்டார்டிங் ஹாண்டில்" போட்டும் பார்த்துவிட்டார்!

கடைசியில், நாளைக்கு எங்காவது வேலை தேடித்தான் ஆகவேண்டும், என்று தானாக முடிவு செய்துகொண்டு "சார்! பெட்ரோல் தீர்ந்துவிட்டது!" என்றார்!

பார்க்க வேண்டுமே மானேஜரின் முகத்தை! நல்ல வேளையாக 'ஸ்டார்டிங் ஹாண்டில்! அவர் கையில் இல்லை! இருந்திருந்தால் டிரைவரின் பாடு அன்று ஆபத்துத்தான்!

கார் நாற்சந்தியிலேயே நின்றது! தள்ளுவதற்கு ஆள்தேட டிரைவர் தம்புசாமி புறப்பட்டார்!

டாக்ஸி ஒன்றைப் பிடித்துக்கொண்டு மானேஜர் மார்க்கசகாயமும், நானும் பறந்தோம்!

கோர்ட்டுக்குள் நுழையும்போது சரியாக மணி 1-20! வழக்கறிஞர் வேதாசலம் வெளியே வந்தார்!

"சார்...! நம்மகேஸ்..." மானேஜர் பேசினார், வார்த்தைகளை விழுங்கிய வண்ணம்!

"என்னய்யா...! உங்க கேஸா...! முடியாது போங்க! ரூ. 100 பீஸ் கேட்டா, பிருவா அன்னிக்கு முடியாதுன்னு போயிட்டிங்க, இன்னிக்கு என்னடான்னா" வழக்கறிஞர் எரிமலையானார்.

"சார், சார்!" அவ்வளவுதான் பேச முடிந்தது மானேஜரால்!

அப்போது வழக்கறிஞரின் கிளார்க் வந்தார்.

"வருத்தப்படாதிங்க, சார்! போனது போச்சி...! இனிமே வருத்தப்பட்டு என்ன பண்றது?...எதையும் யோசிச்சு செய்திருந்தா இப்படி ஆயிருக்காதல்ல!"

மானேஜர் விழித்தார்!

வழக்கறிஞர் கேட்டார் "என்னப்பா! என்ன விஷயம்!"

"உங்களுக்கு தெரியாதா சார்!... இந்த கேசை தள்ளுபடி பண்ணிட்டாங்க சார்! அதெல்லாம் 11-30 மணிக்கே முடிஞ்சிடுச்சே!"

மார்க்கசகாயம் மூர்ச்சையானார்!

★

மனிதனது மனம்தான் அவனுடைய உண்மையான வீடு. அந்த வீட்டினுள் அறிவென்ற அகல் விளக்கொன்று எரிந்துகொண்டே இருக்கிறது. அது மினுமினுக்கலாம்—காற்றில் அணைந்து விடுவதைப்போலத் தோன்றலாம். அது அழிவில்லாதது, நிலையானது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

'அரிப்பு' தங்களிடம் இருப்பதாகக் காட்டிக்கொள்ளுகின்றனர். அதே சமயத்தில் இருக்கின்ற எதிர்க்கட்சி எதுவும் தகுதியற்றது, பலமற்றது, விஷயங்களைப் புரிந்துகொள்ளாதது, கட்டுப்பாடு பெறாதது, என்ற குற்றச்சாட்டும் தந்தவண்ணமிருக்கின்றனர்.

அப்படிப் பேசுவது கட்சிக் கூட்டங்களுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம்!

ஆனால் மக்களின் குறை எதனையும் தீர்க்காமல், அவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாமல், இப்படியெல்லாம் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது ஆபத்தானது!

"எங்களுக்கு ஒன்றும் ஆபத்து ஏற்பட்டுவிடவில்லையே! இதோ பாருங்கள், தேர்தலிலே நாங்கள் எந்த அளவு வெற்றிபெற்றிருக்கிறோம், போட்டியிடுகிறோம் — வெற்றி பெறுகிறோம்" என்று கட்சியின் தலைவர்கள் வாதிடுகின்றனர்.

ஆனால் காங்கிரசுக்கட்சி, தேர்தலுக்கென்றே பெரியதோர் படையை, ஏராளமான பொருட்செலவில், தயாரித்துவைத்திருக்கிறதென்பதனை, எவரே அறியார்!!

அதைவிட முக்கியமானதொரு உண்மை! பற்பல துறைகளிலேயும் ஈடுபட்டிருக்கிற சுயநலக்காரர்களனைவரும், தங்களைக் காக்கின்ற-அடைக்கலம் தருகின்ற கட்சி காங்கிரசு என்பதனை உணர்ந்து, தேர்தல் காலத்தில் அவர்தம் முழு ஆதரவையும் காங்கிரசுக்கே தருகின்றனர் என்பது யாருக்குத் தெரியாது?

கும்பி கழுவ வழியின்றித் தத்தளிக்கின்ற மக்கள், பணத்திற்கு மிக எளிதிலே இரையாகிவிடுகின்றனர் என்ற உண்மை தெரியாதவர் எவர்?

காசு பெற்றிருப்போர் எவராயிருப்பினும் வருக வருக என்று, விலைமாதின் ரகத்தில், அங்ஙனம் புதிதாக வருவோருக்கும் தமக்குமிடையே ஏதாவது தொடர்பு இருந்ததா, இனி எந்த வகையிலே தொடர்பு இருக்கக்கூடும், என்பதைப் பற்றியெல்லாம் துளியும் கவலைப்படாமல், வந்தோருக்கெல்லாம் காங்கிரசு இடமளித்து விடுகிறது என்கிற உண்மையினை அறியாதார் யார்?

காங்கிரசுக் கட்சியின் சார்பாகத் தேர்தலிலே நிற்போரில் கள்ளமார்க்கெட்காரரும், கொள்ளை இலாபமடிக்கின்றோரும், வட்டிக்கடைக்காரர்களும், காண்டிராக்டர்களும், ஏராளம் என்பதனை உணராதார் எவர்?

முதன்முதலாகக் கதரணிவோர் பட்டியலே மிகப் பெரியதாக இருக்குமே!! வேறு பலர், காங்கிரசைத் தேர்தலிலே எதிர்ப்பதைவிட, அதனோடு ஒட்டிக்கொண்டு அதன் மூலம இலாபவேட்டையாடுவதிலே கண்ணும்கருத்துமாக இருக்கின்றனரே!

எப்படியேனும், எம்முறைகளைக் கையாண்டேனும், தேர்தலிலே வெற்றிபெற்றாகவேண்டும் என்ற 'அரிப்பு' காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்டது!

அந்த அரிப்பின் பலனாகத்தான் இத்தகைய சேர்க்கைகள், எவராலும் நியாயமானதென்று ஏற்றுக்கொள்ள முடியாத தொடர்புகள், காண்போர் வெறுப்படையத்தக்க விதத்திலே அமைந்துவிடுகின்ற பற்பல ஏற்பாடுகள், இவையனைத்தையும் கொண்டு, தேர்தல் களத்திலே வாகைசூடுகிறது காங்கிரசு!

மக்கள்பால்செல்வாக்குப்பெற்ற எந்தக் கட்சியும், இத்தகைய 'பதவிமோகம்' கொண்ட கனதனவான்களோடு கூடிக் குலவ முன்வராது! 'கற்பு' என்பது தனி மனிதர்களுக்கு மட்டுமல்ல—கட்சிகளுக்கும் உண்டு — இருக்க வேண்டும்!

இதோ வெற்றி, வெற்றி என்று பெரியதோர் பட்டியலை நீட்டிய வண்ணம், பறையறைகிறதே காங்கிரசு, அந்தப் பட்டியலிலே எத்தனைபேர் உண்மையான காங்கிரசுவாதிகள், எத்தனைபேர் அங்காடியிலே விலைக்கு வாங்கப்பட்டோர்?

வெற்றியா தோல்வியா என்று முடிவு அறிவிக்கப்படும் வேளையில், கொட்டியழுத பணத்தை எண்ணிக் குமுறிக்கொண்டிருப்போர் எத்தனை பேர்?

இதைப்போன்ற டம்பங்களையும் தகிடுதத்தங்களையும் இன்னும் எத்தனை நாளைக்குக் கையாள முடியும்?

நாளுக்கு நாள், தேர்தல் அவர்களுக்குத் தொல்லை தருகிறதென்பது மட்டுமல்ல. அதற்கான செலவும் பெருகி வருகிறது. மிகப் பெரிய அளவில்!

பாங்குகளில் கடன் பெற்று, இடங்க, கிடங்காகப் பொருள்களை வாங்கிப் போடுகின்ற வாணிபர்களைப்போலத்தான், இன்று காங்கிரசுக் கட்சியின் தேர்தல் வெற்றி அமைந்துவிடுகிறதே தவிர வேறல்ல. ஆனால் இந்த நிலை நிரந்தரமாக நீடிக்க முடியாதே!

காங்கிரசுக் கட்சிக்கும் தேர்தல் காலத்திலே அதற்குள்ளே நுழைகின்ற சனதனவான்களுக்கும் கசப்பானதோர் பாடம் காத்துக் கிடக்கிறது. ஜனநாயக சக்திகளனைத்தும், ஜனநாயக விரோதமான இந்தச் செயல்களைப் பற்பல முனைகளிலிருந்தும் எதிர்க்கத் தீர்மானித்துவிட்டன: பலமிழந்த காங்கிரசு, எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படுகின்ற வரை, ஜனநாயக சக்திகளின் எதிர்ப்பு இருந்தே தீரும்.

ஆனால் அந்த நாள்வரை, முற்போக்கு எண்ணம் கொண்ட தனி மனிதர்கள் மட்டுமல்ல, கட்சிகளும் ஒருமுகமாக, தீவிரமாகப் பணியாற்றித் தீரவேண்டும், அச்சம் தயை தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல். மக்களை விழிப்படையச் செய்யும் பணி, இடைவிடாமல் நடைபெற்றாக வேண்டும்.

மக்கள். தம் குறைகளையும் கோரிக்கைகளையும், தேவையான போது எடுத்துச் சொல்ல, அவற்றிற்காக வாதாட, அவர்கள் ஒரு சிறிதும் தயங்கலாகாது.

காரியம் சாமானியமானதல்ல! ஆனால் ஆளுகின்ற கட்சி, தேர்தல் களத்தில் தகாத முறைகளைக் கையாண்டுகொண்டிருக்கிறவரை, இது இடைவிடாமல் நடைபெற வேண்டும்!

இல்லையேல் ஜனநாயகத்தின் தரம் குறைவுறும் — அதன்மீது மக்களுக்கிருக்கிற நம்பிக்கையும் குறைந்துவிடும்!

இந்தக் கருத்தினை மனதிலே வைத்துக்கொண்டுதான், திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசை எதிர்க்கிறது. அந்த எதிர்ப்பின் விளைவு என்ன ஆகும்? யாருக்குச் சாதகமாக அமையும்? எவருக்குப் பாதகமாக முடியும் என்பதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை திராவிட முன்னேற்றக் கழகம். ●

வி. ஆர். துரை

அன்று சோலையூர் இரயில் நிலையமே, மக்கள் வெள்ளத்தால் மூடி மறைக்கப்பட்டிருந்தது. அரிவையர் பட்டாளமும் ஆண்களுக்குச் சமமாகவே இருந்தது. எங்கோ சாமியார்கள் பிறந்த மேனியாய்க் காட்சி தருகின்றார்களாம். அந்தக் காட்டுமிராண்டித்தனத்தைக் காணவேண்டி, இந்தக் காலத்தில் மக்கள், கூட்டம் கூட்டமாக, பணத்தைப் பாழாக்கிக்கொண்டு, கிளம்பிவிட்டிருந்தார்கள். துடிதுடிப்புமிக்க வாலிபர் படைக்கிடையே, துடியிடைச் சிங்காரிகள் மாட்டிக்கொண்டு, தாளம் போடுவதைப் பார்க்குங்கால், மனதிலே கொஞ்சம் இரக்கம் பிறக்கத்தான் செய்தது. என்ன இருந்தாலும் இந்தக் குறும்பு பிடித்த அரும்புமீசைக்காரர்கள், அனிச்ச மலரினும் மென்மையான பெண்களிடம அப்படி நடந்துகொள்ளக் கூடாது; கருணை கொஞ்சம் கன்னியர்மீது காட்டத்தான் வேண்டும்; அவர்களின் அட்டகாசத்திற்கு ஓர் அளவும் இருக்கவேண்டும். அந்த மலைத்தோள் பெற்ற வாலிபரை விரும்பும் சிலைகளும் உண்டு!

என்னைக் கிராமத்திலிருந்து இரயில் நிலையத்திற்கு ஈருருளியில் ஏற்றிக்கொண்டு வந்தவன், ஏனோ தன் முகத்தை 'உம்' மென்று தூக்கிவைத்துக்கொண்டிருந்தான். அவன் கவலைக்குக் காரணம் புரிந்தது. ஒரு ஐம்பது புதுக்காசுகள் எடுத்துக் காட்டினேன். அவன் முகம் மலர்ந்தது. குட்டைமனம் கொண்டவன் விடை பெற்றுக்கொண்டான்.

என்னிரு கால்களோ என்னால் நிற்க முடியவில்லையே என்று புலம்ப ஆரம்பித்தன. உட்கார வேண்டி ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்தெடுக்கும்படி கண்களுக்குக் கட்டளைபோட்டேன். எனக்கோர் இடம் கிடைத்தது. எதிரே பூ மணக்கும் கூந்தலைக் கொண்ட பசுந்தோகையயில், பெட்டியொன்றைக் கீழேபோட்டு அதன்மேலே உட்கார்ந்திருந்தாள். பதினெட்டு வயதிற்குமேல் பைங்கிளியின் வயது போகாது. பாவையின் ஆடையலங்காரம் முதல்தரமாக இருந்தது. பெருநிலவையொத்த முகத்தில் என்னென்ன இருக்க வேண்டுமோ, அவையனைத்தும் அந்த அணங்கிடம் திருநடனம் புரிந்தன. அணிந்திருந்த பட்டாடை ஆரணங்கின் தங்கநிறப் பாதங்களைக்கூட வெளியே தெரியவிடவில்லை. எதைச் சொல்லுவது; எதனைச் சொல்லாமல் விட்டுவிடுவது போங்கள். என்னை அவள் பார்த்துவிட்டாள். நானும் அவளைப் பார்த்துவிட்டேன்.

வஞ்சனை இல்லாமல் குன்று போல் உடம்பை வளர்த்துவிட்டிருந்த, அந்த இரண்டுபேரும் எந்தப் பயங்கரமான செயலைச்செய்து முடிக்கவும் அஞ்சமாட்டார்கள். மிகவும் உன்னிப்பாக மதிமுக மங்கையையே அவர்கள் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கிடையே நிகழ்ந்துகொண்டிருந்த பேச்சும், பொன்மேனியின் புன்சிரிப்பு—கண்ணழகு—சின்ன இடை ஆகியவை பற்றித்தான் இருக்கும். வலையில் விழுமா இந்த மான் என்று வட்டமிடுகிறார்கள் போலும் என்று நான் நினைத்துக்கொண்டேன். அந்த இடத்திலேயிருந்து விடுதலை பெற முயற்சித்தேன். ஆனால், அப்படிச் செய்யத்தான் இயலவில்லை. நாம் பஞ்சமில்லாமல் எவ்வளவோ நினைக்கின்றோம். அவ்வளவையும் எங்கே செய்து முடிக்கின்றோம்? நினைத்தவற்றுள் ஒன்றிரண்டைச் சரியாகச் செய்துமுடிப்பதற்குள்ளாகவே போதுமென்றாகிவிடுகின்றது.

பூக்களுக்கெல்லாம் இராணியாக, கண்களைக் கவரும் ரோஜாவைச் சொல்லலாம். பெண்கள் விரும்பும் நறுமணம் மிக்க மல்லிகை மலரை, மழை மேகக் கூந்தலில் சூடியிருந்தாள், அவள். அதன் இனியமணம் வந்துவந்து என்னை வாட்டிக்கொண்டிருந்தது. இமைக்காமல் எதிர்பாரா விதமாகக் கண்டபுதியவளை, தைரியமாக நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அடிக்கடி என்னைப் பார்ப்பதும், எங்கோ நோக்குவதுமாக அவளிருந்தாள். எனக்கொன்றும் அந்தப் பார்வையில் தெரியவில்லை! அவசரத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டு தாகம் தீர்ந்ததும் பறந்துவிடுவேன் என்று ஒருவேளை கருதிவிட்டாளா?

எங்கிருந்தோ என்சின் ஒன்று மெதுவாக வந்தது. 'நான் தயார்' என்று கூச்சல்போட்டு அறிவித்தது. அலைந்து கொண்டிருந்தவர்கள் கூண்டிற்குள் அடைந்தனர்; அடுக்கிவைத்த புளிமூட்டை போல! 'தமிழ் நாட்டை' நோக்கித் தலை நிமிர்ந்து வண்டியும் செல்ல ஆரம்பித்துவிட்டது. வனிதையோ துள்ளி எழுந்தோடிச் சென்று, கம்பியைச் சாமர்த்தியமாகப் பிடித்துக்கொண்டு, பெட்டியிலேறிமறைந்துவிட்டாள். வில்லிலிருந்து பறந்த அம்பு போல், பம்பரக் கண்ணால் இப்படிச் செய்து,

என்னைத் திகைப்படையச் செய்துவிட்டாள். என்ன ஆச்சரியம்! எவ்வளவு துணிச்சல்! முகிலை இழுத்துப்போர்த்திக்கொண்ட முழுநிலாவென, ஓடோடிச் சென்று ஓடும் இரயிலில் தொத்திக்கொண்டு மாயமாய் மறைந்துவிட்ட, மங்கையின் சாமர்த்தியத்தை என்னவென்று செப்புவது? இக்காலப் பெண்கள் எதிலும் தோற்றவர்கள் அல்ல. என்னைப்பற்றிய நினைப்பு கன்னியின் உள்ளத்தில் குடியேறி இருக்குமா? அப்படியிருந்தால் நான் மிகவும் பாக்கியசாலிதான்.

எனக்கு மறதியே கிடையாது என்று சவால் விடுபவர்களே தவறி விடுகின்றார்கள். அதிலும் அவசரக் காலத்தில் மறதியெனும் வியாதிக்கு மிகவும் கொண்டாட்டம் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆச்சரியத்தில் என்னைப் பிடித்துத் தள்ளிவிட்டு, அதே நேரத்தில் அமைதியற்ற சூழ்நிலையையும் அன்புப் பரிசாக வாரி வழங்கிவிட்டுப் பறந்துவிட்ட அவள், கீழே போட்டு அமர்ந்திருந்த பெட்டியைத் தன்னுடன்கொண்டு போகத் தவறிவிட்டாள். கிளிமொழியாளின பெட்டிக்கு அந்த இரண்டு குண்டர்களும், சொந்தம் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள்.

"இது என் பெட்டி!"

"டேய்! அது என்னுடைய பெட்டி!"

யாருடைய பெட்டிக்கோ அவர்களுக்கிடையே தகராறு ஆரம்பித்துவிட்டது. பணத்தின் மேல் இருக்கின்ற ஆசை, பிரியா நண்பர்களைக்கூடப் பிரித்துவைத்து விடுகின்றது. இருந்த ஒற்றுமையை இழக்கச் செய்துவிட்டு குஸ்திக்குத் தயாராக்கி விட்டு விடுகின்றது. அவர்கள் கைகலந்து மூக்குடைத்துக்கொண்டார்கள். நிலைமையைச் சமாளிக்க ஐந்தாறு போலீஸ்காரர்கள் அங்கே ஓடிவரவேண்டியிருந்தது.

என்ன இருக்கும் பெட்டிக்குள்? தங்க நகைகளா? பட்டாடைகளும் கத்தை கத்தையாக நோட்டுகளும்தான் இருக்கும்! பணக்காரத் தோட்டத்தில் வளரும் செல்லக் கிளியாக, பார்ப்பதற்குத் தென்பட்ட அந்த அணங்கு, கேவலம் சாதாரண பொருள்களையா பெட்டிக்குள் வைத்துப் பூட்டியிருப்பாள்? போலீஸ்காரர் பெட்டியைத் திறந்ததும் அலறிவிட்டார்கள். மிகப்பெரிய வீரர்கள்! குண்டர்கள் இரண்டு பேரும் அசந்துவிட்டார்கள். கடகடவென்று அவர்களின் பெரிய உடம்பு ஆடிவிட்டது. பத்திரமாக ஒரு பெண்ணின் தலை மட்டும் பெட்டியில் இருந்தது. எனக்கும் சுய நினைவு திரும்பிவரவே அதிக நேரம் பிடித்தது. 'மாமியார்' வீட்டிற்கு விலங்குமாட்டி, குண்டர்களைத் தள்ளிக்கொண்டு போனார்கள். ஏற்கெனவே சிறைச்சாலையில் உண்டு உறங்கி, உல்லாசமாகக்காலம்கழித்தவர்களாம் அவர்கள். ஒரு பொழுதுபோக்கு விளையாட்டாக, சிறைக்குச் செல்வதையும் திரும்பி வருவதையும் அவர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள். என்றாலும் இந்தமுறை பழி ஓரிடம் பாவம் வேறிடம் என்ற கதையாகிவிட்டது.

யாருடைய தலை அது? எதற்கும் அஞ்சாமல் துணிந்து கொன்றுவிட்ட அந்தக் கொடியவன் — கொடியவள் யார்? இல்லையோ இதயம்! நகைக்கும் பணத்திற்கும் நங்கையின் திரும்பப் பெறமுடியாத உயிரைக் குடித்துவிட்டானா? ஒருவேளை, அவளின நடத்தையில் கொண்டவனுக்குச் சந்தேகமா? காதலித்த உத்தமனைக் கைவிட்டு, கண்டவனுக்கு மனமகிழ்ந்து மாலை சூட்டிவிட்டதால் வந்த வினையா? சீமான ஒருவனுக்குத் தனதுடலைத் தருமம் செய்யாத காரணத்தால், செல்வம் இருக்கிறது — சமாளித்துக் கொள்ளலாம் எதையும் என்றவன், திமிரால் துணிந்து செய்துவிட்ட அக்கிரமமா? அந்தச் சதிக்கு நான் கண்ட அழகியும உடந்தையா? அழகியா அவள்? அடங்காப்பிடாரி! ஆணவம் பிடித்த ஒய்யாரி! நல்ல உருவத்தில் நடமாடும் கொலைகாரி! நச்சுப் பாம்பு! கத்தினாலும் விடாமல் கொத்திவிட வேணடும் அத்தகையை குத்து விளக்குகளை என்றுரைக்க, ஆத்திரம் கொப்பளித்துக்கொண்டு வருகின்றது. ஐயோ, அந்தப் பெண்ணை இழந்துவிட்ட பெற்றவர்கள், எங்ஙனம் ஆறுதல் அடைவார்கள்?

என்னவெல்லாமோ நானவளைக் கண்டபோது எண்ணியெண்ணி மகிழ்ந்தேன். கோட்டை பலவும் உள்ளத்தில் கட்டி வளர்த்தேன். மின்னலைப்போல் மறைந்துவிட்ட போது, கரையிலெடுத்துப்போட்ட கயலானேன். இப்பொழுது நெஞ்சில் அவளை நினைத்துப்பார்க்கவே அஞ்சுகின்றேன்; அடியோடு மறந்துவிட்டேன். அழகுண்டு என்றால் ஆபத்தும் அங்குண்டு என்று வருணிக்கிறார்கள். பெரியார் வாய்ச்சொல் பொய்யில்லை; மெய்யேயாகும்.

மேற்கே சென்ற கதிரவனை, ஏதோ ஒன்று விழுங்கிவிட்டிருக்க வேண்டும், இருட்கடலில் ஞாலம் தொப்பென்று விழுந்தது. தூக்கம் என்னைத் தாலாட்ட மறந்தது. ஏக்கம் எனக்கில்லை. என்னவோ உறக்கம் பிடிக்கவில்லை. எப்படியோ இரவு தொலைந்தது. கீழ்த்திசையில் ஞாயிறு வந்தது. பனி பறந்தது. பங்கயம் சிரித்தது. பறப்பவைகளுக்கெல்லாம் ஆட்டம். பாரெல்லாம் ஒரே கொண்டாட்டம்! இரவெல்லாம் என்னைச் சுமந்துகொண்டு. 'அரியலூரா'க்காமல் தள்ளாடித் தள்ளாடி வந்த இரயில், இறுதியாக ஒரு பெருமூச்சுவிட்டு சென்ட்ரல் ஸ்டேஷனில் நின்றுவிட்டது.

இறங்கிய நான் தயங்கி நின்று, பின்னர் அவசர அவசரமாக நடக்க ஆரம்பித்தேன். வெங்காயச்சருகுச் சேலை வேல்விழிகள் சிலர், சொல்லால் கேலியாக எனை யடித்து, விளையாடிய வண்ணம் வந்துகொண்டிருந்தார்கள். சில நங்கையர்க்கிடையில் தனியாக ஒரு ஆண்பிள்ளை, விஷயம் தெரியாமல் மாட்டிக் கொண்டால், தலை நிமிர்வது கஷ்டம். அப்படியே-பெண்ணொருத்தி சிக்கிவிட்டால், ஆண்களிடமிருந்து தப்புவது எளிதான காரியமல்ல; பேசும் விழிகளிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் கொட்டிவிடுவதும் உண்டு.

எண்ணங்கள் பலவற்றைச் சுமந்துகொண்டு, பஸ் நிற்கும் இடத்தில் வந்து நின்றேன். என்னைப் போலவே அங்கு மங்கை நல்லாள் ஒருத்தி, வரப்போகும் மோட்டாருக்காக நின்ற வண்ணம் தவமிருந்தாள். அவளின் பின் பக்கத்தை மட்டுமே நான் பார்க்க முடிந்தது. பாவையின் முன்ன

ழுகை... நான் நினைத்து முடிக்கவில்லை. திரும்பியவள் அம்பு விழியால் என்னைத் தாக்கியபோது, தீ மிதித்தவன் போலானேன். தலைமட்டுமிருந்த பெட்டிக்குச் சொந்தக்காரி! அப்படியே கன்னத்தில் ஓங்கி அறைந்து, அலக்காகத் தூக்கிக்கொண்டு போய்ச் சப் இன்ஸ்பெக்டரின் முன்னால் போட்டுவிடலாமா, என்று ஆத்திரப்பட்டேன். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ! யார் கண்டார்? தேளிடம் வலியப்போய் விளையாட்டு எதற்கு? அங்கிருந்து ஓடிவிட எண்ணினேன். எனக்கேதாவது வம்பு வைத்துவிட்டால் என்ன செய்வது?

"நீங்கள் மிகவும் பயந்துகொண்டே என்னை நோக்குகிறீர்கள். பிறர் கண்டு பயப்படுகின்ற அளவுக்கு, நான் என்ன அவ்வளவு பயங்கரமானவளாகவா தென்படுகிறேன்? ஆத்திரப்படுகிறீர்கள். அருவருப்பும் அடைகிறீர்கள். கேவலம், ஒரு பெண்பிள்ளையைக் கண்டு ஓடப்பார்க்கும் ஆண் சிங்கத்தை முதல் முறையாக இப்பொழுதுதான் காண்கிறேன். கண்டதில்லை இதுவரையில்; கதையில் படித்ததில்லை; காதால் கேட்டதுமில்லை"

"நீயா பெண்பிள்ளை? ஆண் சிங்கம்! புலிக்குட்டி! எப்படியோ பெண்ணாகத் தவறிப் பிறந்து விட்டிருக்கிறாய். இரண்டாவது முறையாக இங்கே நானுன்னைச் சந்திக்கிறேன். முதல் முறையாகக் கண்டபோதே, உன்னுடைய திருவிளையாடல் புராணத்தைத் தெரிந்துகொண்டேன். எதிர்பாரா விதமாக இரண்டாவது முறையும் உன்னைச் சந்திக்க நேர்ந்தமைக்கு வருந்துகின்றேன்; வருகின்றேன்"

"நில்லுங்கள்; போய்விடாதீர்கள்."

'பிறகென்ன? போகாமல் உன்னருகில் வந்து பல்லைக்காட்டிச் சொல்லுகின்றாயா?"

"படித்திருக்கின்ற நீங்கள் முன் கோபக்காரராக இருக்கிறீர்கள். எதையும் கொஞ்சம் நிதானித்துப் பேசுங்கள். திரும்பப் பெறமுடியாது வார்த்தைகளை!"

"எல்லாவற்றையும் ஆளைப் பார்த்தே எடைபோட்டுச் சொல்லி விடுகின்ற அளவுக்கு, திறமைசாலியாக இருக்கின்றாய். அப்படியில்லாமலா அநியாயமாக... சே! எதற்காக அதையெல்லாம் உன்னிடம் படித்துக்கொண்டிருக்க வேண்டும். என்னைப் பேசாமல் விட்டுவிடு. நான் போய்விடுகின்றேன்."

"குற்றமாகவே நான் பேசுவதையெல்லாம் எடுத்துக்கொள்ளுகிறீர்கள். அப்பாவியான மனிதர் நீங்கள். எதையோ சொல்ல வந்து எங்கேயோ கொண்டுபோய் முடித்துவிட்டீர்களே! அதைக் கொஞ்சம் இந்த அபலைக்குச் சொல்லமுடியுமா?"

"ஆகா! என்ன அடக்க ஒடுக்கம்! ஆமாம்; எங்கே உன் பெட்டி? ஒன்றுமறியாதவர்களைக் குற்றவாளியாக்கி விட்டாய்; கொட்டடிக்குள் தள்ளிவிட்டாய். ஏன் திகைக்கிறாய்? பதிலெங்கே? பெண்ணே பதிலெங்கே?"

"ஆணே! அவசரப்படாதீர்கள்"

"ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்றுகூடச் சொல்லுவாய்"

"என் பெட்டி! கொட்டடி!! நீங்கள் மிகவும் குழப்பமடைந்திருக்கிறீர்கள். என்னைப்பற்றி ஏதோ தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது மட்டும் உண்மை."

"போதும் உன் நடிப்பு! யாரிடம் கதை படிக்கிறாய்? கொலைகாரியான உன்னைப் பார்க்க, என்னிரு கண்கள் கூசுகின்றன."

ஏனோ, சம்பந்தமில்லாமல் எங்களுக்குள் வீணாக நடந்த வாய்ச் சண்டை, முற்றுப்பெற்றது. மௌன விரதம் ஆரம்பமாகியது. சிரித்தபடியிருந்த அவள் முகம் வாடிய மலர்போல் சுருங்கிவிட்டது. ஏதேதோ நான் பேசி, வேதனையில் வனிதையைத் தள்ளிவிட்டேன். அந்தநேரத்தில் அங்கே வந்து நின்ற மனித வண்டிக்காரன், "வாங்க, வாங்க சார்! ஐயா, எங்க போறீங்க? நம்ப வண்டியிலே உக்காருங்க! நிக்காம ஒரே நிமிசத்தில் இசுத்தனுபோய் தள்ளிடமாட்டேனா! யோசிக்காம வாங்க!" என்றுரைத்தான். நழுவுவதற்கு அதையே நல்ல சந்தர்ப்பமாகக் கொண்டு, வண்டியிலேறி உட்கார்ந்துவிட்டேன். அவளுமா என் பக்கத்தில் வந்து குந்திக்கொள்ளவேண்டும்! மாடு, குதிரை போல் இன்னும் வண்டி இழுத்து வயிறு வளர்க்கும் மனிதன், எங்களிருவரையும் கணவன் மனைவி என்றே கருதிவிட்டான்.

[அடுத்த இதழில் முடியும்.]

ஏஜண்டுத் தோழர்களுக்கு

1—4—59 முதல் புதுக்கணக்குப் போடுவதால், 31—3—59 வரையுள்ள **பாக்கி முழுவதையும்** 5—4—59-க்குள் அனுப்பி வைக்கும்படி விற்பனையாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

குறிப்பு:—

ஏஜண்டுகள், தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை விபரத்தை, ஒவ்வொரு வாரமும் **செவ்வாய்க் கிழமைக்குள்** தெரிவித்துவிடவேண்டும்.